தினபூமி
thinaboomi.com
பூமி: 33 சுற்று: 337 புரட்டாசி 29
RNI Regn. No.55306/93 TN/CCN/556/2012-2014
சென்னை, புதன், அக்டோபர் 15, 2025 ▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸புதுச்சேரி பக்கம் 8 ₹3.00



## அண்டை நாடுகளுடனும் மகிழ்ச்சியாக உள்ளோம்: ஆப்கன் அமைச்சர் பேச்சு

...2-ம் பக்கம்

## பீகாரில் தொகுதி பங்கீடு: ஆர்.ஜே.டி. 135, காங்கிரஸ் 61 தொகுதிகளில் போட்டி?

...3-ம் பக்கம்

## மே.இ.தீவுகள் அணியை வீழ்த்தி டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றியது இந்திய அணி

....6-ம் பக்கம்





● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் மாநில திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளான "கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தின் தாக்க மதிப்பீடு", "நான் முதல்வன் திட்டத்தின் மதிப்பீட்டாய்வு", "தமிழ்நாட்டில் புத்தொழில் துவக்கத்திற்கான சுற்றுச்சூழல் அமைப்பு, "தமிழ்நாடு கிராமப்புற, நகர்ப்புற வீட்டுவசதி கொள்கை", "தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகரிய மேம்பாட்டு கொள்கை" ஆகியவற்றை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மாநில திட்டக்குழுவின் செயல் துணைத்தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் ஆகியோர் சமர்ப்பித்தனர்.



● மறைந்த தினபூமி நாளிதழின் நிறுவனரும், தொழில் அதிபருமான கே.ஏ.எஸ்.மணிமாறன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று தினபூமி அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு அவரது மனைவியும், தினபூமியின் உரிமையாளருமான பூங்கோதை மணிமாறன் அவர்கள் மலர்தூவி தீபாராதனை செய்து வழிபட்டார்.

### தமிழக சட்டப்பேரவையில் கூடுதல் செலவுக்கான

# மானியக்கோரிக்கை மீதான விவாதம் இன்று ஆரம்பம்

## முதல் நாளில் மறைந்த உறுப்பினர்களுக்கு இரங்கல்

சென்னை, அக். 15-

**தமிழ்நாடு சட்டசபையில் 2025-2026-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக்கோரிக்கைகள் மீதான விவாதம் இன்று முதல் நடைபெறுவுள்ளது. மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் 8 பேர் உள்ளிட்டவர்களின் மறைவுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டு அவை ஒத்திவைக்கப்பட்டது. இன்று 2025-2026-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக்கோரிக்கைகள் பேரவையில் அளிக்கப்பட்டு அதன் மீதான விவாதம் இன்று தொடங்குகிறது.**

**8 பேர் மறைவுக்கு...**

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் தமிழக சட்டசபை கூட்டம் நேற்று காலை 9.30 மணிக்கு கூடியது. கூட்டம் தொடங்கியதும் திருக்குறள் வாசிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் 8 பேர் மறைவுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டது. தொடர்ந்து, 2 மணித்துளிகள் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**துரைமுருகன் - இ.பி.எஸ். சந்திப்பு**

உடல்நலமின்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று சட்டபேரவைக்கு உற்சாகமாக வந்தார். அவரை பேரவை வளாகத்தில் எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி தனியாக சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

**இரங்கல் தீர்மானம்...**

அதன்பின்னர், கரூரில் நடைபெற்ற துயர சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து, மறைந்த கேரள மாநில முன்னாள் முதல்வர் வி.எஸ்.அச்சுதானந்தன், ஜார்கண்ட் மாநில முன்னாள் முதல்வர் சிபுசோரன், நாகாலாந்து முன்னாள் கவர்னர் இல.கணேசன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் சுதாகர் ரெட்டி, ஐ.ஏ.எஸ். அதிகாரி டாக்டர் பீலா வெங்கடேசன் ஆகியோர் மறைவுக்கும் இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டது.

**கூடுதல் செலவுக்கான**

தொடர்ந்து, வால்பாறை உறுப்பினர் டி.கே.அமுல் கந்தசாமி (அ.தி.மு.க.) மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைவரும் மவுன அஞ்சலி செலுத்தியதும் நேற்றைய கூட்டம் இத்துடன் ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் மு.அப்பாவு அறிவித்தார். அத்துடன் கூட்டம் நிறைவடைந்தது. இன்று (புதன்கிழமை), 2025-2026-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக்கோரிக்கைகள் பேரவையில் அளிக்கப்படும்.

**மானியக்கோரிக்கைகள்**

ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணிக்கு கூட்டம் தொடங்கியதும் முதலில் கேள்வி நேரம் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. கேள்வி நேரம் முடிந்ததும் 2025-2026-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெறுகிறது. கடைசி நாளில், அதாவது 17-ம் தேதி 2025-2026-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பதிலுரை அளிக்கப்பட இருக்கிறது. அத்துடன் சட்டசபை கூட்டம் நிறைவடையும்.

### ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் அமைகிறது:

# ரூ.87,520 கோடியில் கூகுள் ஏ.ஐ. மையம்

## பிரதமர் நரேந்திரமோடியிடம் சுந்தர்பிச்சை விவரிப்பு

புதுடெல்லி, அக். 15-

**விசாகப்பட்டினத்தில் 15 பில்லியன் டாலர் மதிப்பீட்டில் கூகுள் அமைக்க உள்ள செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மையம் குறித்து அதன் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, பிரதமர் நரேந்திர மோடியிடம் விளக்கினார்.**

அமெரிக்காவுக்கு வெளியே உலகின் மிகப் பெரிய செயற்கை நுண்ணறிவு மையத்தை கூகுள் நிறுவனம் அமைக்க உள்ளது. இந்தியா வந்துள்ள கூகுள் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, பிரதமர் நரேந்திர மோடியை டெல்லியில் சந்தித்து இந்த திட்டம் குறித்து விவரித்தார்.

பின்னர் இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "விசாகப்பட்டினத்தில் முதன்முதலாக அமைக்கப்படும் கூகுள் ஏஐ மையம் குறித்த எங்கள் திட்டங்களை, பிரதமர் நரேந்திர மோடியுடன் பகிர்ந்து கொண்டதில் மகிழ்ச்சி அடைகிறேன். இது ஒரு மைல்கல் வளர்ச்சி.

இந்த மையம் ஜிகாவாட் அளவிலான கணினி திறன், ஒரு புதிய சர்வதேச நீர்மூழ்கி நுழைவு வாயில், பெரிய அளவிலான எரிசக்தி உள்கட்டமைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது. இதன்மூலம், இந்தியாவில் உள்ள நிறுவனங்கள் மற்றம் பயனர்களுக்கு எங்கள் தொழில்முறை முன்னணி தொழில்நுட்பத்தைக் கொண்டு செல்லும். செயற்கை நுண்ணறிவு கண்டுபிடிப்புகளை துரதப்படுத்துவோம். மேலும், நாடு முழுவதும் வளர்ச்சிக்கான உந்துதலை அளிப்போம்" என தெரிவித்துள்ளார்.

சுந்தர் பிச்சை உடனான சந்திப்பு குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஆந்திரப் பிரதேசத்தின் துடிப்பான நகரமான விசாகப் பட்டினத்தில் கூகுள் செயற்கை நுண்ணறிவு மையத்தை தொடங்குவதில் மகிழ்ச்சி. ஜிகாவாட் அளவிலான தரவு மைய உள்கட்டமைப்பை உள்ளடக்கிய இந்த பன்முக முதலீடு, வளர்ச்சி அடைந்த பாரதம் எனும் எங்களின் தொலைநோக்குத் திட்டத்தோடு ஒத்துப்போகிறது.

தொழில்நுட்பத்தை ஜனநாயகப்படுத்துவதில் இது ஒரு மிகப்பெரிய சக்தியாக இருக்கும். இது அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவை உறுதி செய்யும். நமது குடிமக்களுக்கு அதிநவீன கருவிகளை வழங்கும். நமது டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்தும். மேலும், உலகளாவிய தொழில்நுட்ப தலைவர் என்ற இந்தியாவின் இடத்தைப் பாதுகாக்கும்" என தெரிவித்துள்ளார்.

கூகுள் ஏஐ மையம் அமைப்பதற்கானப் பணிகள் அடுத்த 5 ஆண்டுகளில் நிறைவடையும் என்றும், இது உலகளாவிய கூகுள் நெட்வொர்க்குடன் இணைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழக 'மா' விவசாயிகளின் நலன்களை பாதுகாக்க

# மாம்பழ ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பிரதமர் மோடிக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, அக். 15-

**நாட்டின் பொருளாதாரத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யவும், மா விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கவும் மாம்பழ ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை தேவை என்று பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், பானங்களில் மாம்பழக்கூழ் சேர்க்கப்படுவதில் எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ. தரநிலைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.**

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது, 2025-ம் ஆண்டின் மாம்பழப் பருவத்தில் மா விவசாயிகள் மற்றும் மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க மத்திய அரசின் தலையீட்டைக் கோரி 24.06.2025 அன்று நான் கடிதம் எழுதி இருந்தேன். அதன் அடிப்படையில், பதப்படுத்தக்கூடிய மாம்பழ வகைகளை பயிரிட்ட விவசாயிகள், மாம்பழம் கொள்முதல் விலையில் ஏற்பட்ட கடும் வீழ்ச்சியாலும், மாம்பழக்கூழ் மிகக் குறைவான அளவில் கொள்முதல் செய்யப்பட்டதாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

கடந்த ஆண்டு நடந்தது போலவே இந்தப் பருவத்திலும் மா விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் தமிழ்நாடு அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருவதன் ஒரு முக்கிய பகுதியாக இக்கடிதத்தை எழுதுகிறேன். முந்தைய கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தபடி, இந்தியாவில் விற்கப்படும் மாம்பழ பானத்தில் உள்ள பழக்கூழின் அளவு, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் விதிமுறைகளைப் பின்பற்றாமல், பேக்கேஜ் செய்யப்பட்ட மாம்பழச் சாறு உற்பத்தி செய்யப்படுகிறது. பானங்களில் மாம்பழக்கூழ் சேர்க்கப்படுவதில் எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ. தரநிலைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்கான வழிமுறைகளைப் பிறப்பிக்குமாறு இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மா விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், நம்நாட்டில் இந்த பானத்தை அதிகளவில் பயன்படுத்தும் நுகர்வோரின் நலனைக் கருத்தில் கொண்டும், மாம்பழங்களை அடிப்படையாகக் கொண்ட பான உற்பத்தித்தொழிலில் குறைந்தபட்சம் 18 முதல் 20 சதவீதம் வரை பழக்கூழ் உள்ளடக்கத்தை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் மாம்பழ ஏற்றுமதிக் கொள்கையானது மாம்பழ வகை ஏற்றுமதியை மேம்படுத்துவதிலும், மாம்பழப் பொருட்களை பல்வகைப் படுத்துவதிலும் கவனம் செலுத்துவதாகவும், அதற்குத் தேவையான உள்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலமும், ஏற்றுமதி தரநிலைகளுக்கு இணங்க செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் சாத்தியப்படும் என்றும் அத்தகைய நடவடிக்கைகள் மாம்பழங்களுக்கு அதிக மதிப்பைச் சேர்க்கும். அதே வேளையில், மாம்பழக்கூழ் தொழில்களை அதிகமாகச் சார்ந்திருப்பதையும் குறைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆகவே, இந்த முயற்சிகளை மேலும் வலுப்படுத்திட இந்திய அரசின் வணிக அமைச்சகத்தின் கீழ் இயங்கும் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், ஒருங்கிணைந்த பேக்கிங் செய்யும் வசதிகள், உள்நாட்டு கொள்கலன் கிடங்குகள், குளிரூட்டப்பட்ட துறைமுகங்கள், தரச்சோதனை ஆய்வகங்கள், வாங்குபவர்-விற்பனையாளர் சந்திப்புகளை ஏற்பாடு செய்தல், வெளிநாட்டு வாங்குபவர்களை அடையாளம் காணுதல் மற்றும் ஏற்றுமதி தரநிலைகள் குறித்த திறன் மேம்பாட்டுத் திட்டங்களை நடத்துதல் போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டிற்குத் தேவையான ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினையில் இந்தியப் பிரதமர் இத்தருணத்தில் தலையிட்டு, மா விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், மேம்பட்ட ஏற்றுமதி மற்றும் மதிப்புக் கூட்டல் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்ய உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரூ.95 ஆயிரத்தை நெருங்கிய தங்கம் விலை

## ஒரேநாளில் ரூ.1,960 உயர்வு

சென்னை, அக். 15-

**22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று பவுனுக்கு ரூ.1,960 உயர்ந்து மீண்டும் அதிர்ச்சியளித்துள்ளது. வெள்ளியின் விலையும் வரலாறு காணாத புதிய உச்சத்தை எட்டியுள்ளது.**


சர்வதேச பொருளாதாரச் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதிப்பு, டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பில் சரிவு, உக்ரைன் - ரஷ்யா போர் உள்ளிட்ட காரணங்களால் தங்கம் விலை அதிரடியாக உயர்ந்து வருகிறது.

ஒரு பவுன் ஆபரணத் தங்கம் அக்.7-ம் தேதி ரூ.90,400 ஆக உயர்ந்தது. இதன்பிறகு. ஓரிரு நாட்கள் இறக்கமாகவும், பெரும்பாலான நாட்கள் ஏற்றமாகவும் இருந்து வந்த நிலையில், அக்.8-ம் தேதி பவுன் ரூ.91 ஆயிரத்தையும், அக்.11-ம் தேதி ரூ92 ஆயிரத்தையும் தாண்டி, அடுத்தடுத்து வரலாறு காணாத புதிய உச்சத்தை பதிவு செய்தது.

இதன் தொடர்ச்சியாக, சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று முன்தினம் பவுனுக்கு ரூ.640 உயர்ந்து. ரூ.92,640-க்கு விற்பனையானது. இந்நிலையில், சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று கிராமுக்கு ரூ.245 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.11,825-க்கு விற்பனையானது. பவுனுக்கு ரூ.1,960 உயர்ந்து, ஒரு பவுன் தங்கம் ரூ.94,600-க்கு விற்பனையானது. இதேபோல 24 காரட் தங்கம் ரூ.1,03,200-க்கு விற்பனையானது.

இதுபோல, வெள்ளி விலையும் அதிரடியாக உயர்ந்தது. தொழில் துறையில் வெள்ளி தேவை அதிகரிப்பால், அதன் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. வெள்ளி கிராமுக்கு ரூ.9 உயர்ந்து ரூ.206 ஆகவும், கட்டி கிலோவுக்கு ரூ.9,000 உயர்ந்து, ரூ.2,06,000-க்கு விற்பனையானது. தீபாவளி பண்டிகை நெருங்கும் நிலையில் தங்கம், வெள்ளி விலை தொடர்ந்து அதிகரித்து வருவது அனைத்து தரப்பு மக்களுக்கும் அதிர்ச்சி தரும் வகையில் அமைந்துள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -297.07 | -81.85 |
| பாயிண்ட் 82,029.98 | பாயிண்ட் 25,145.50 |



**தங்கம்**
1 சவரன் ₹94,600
1 கிராம் ₹11,825



**வெள்ளி**
1 கிலோ ₹206,000
1 கிராம் ₹206.00



**டாலர்** ₹88.80

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# அண்டை நாடுகளுடனும் மகிழ்ச்சியாக உள்ளோம்: ஆப்கன் அமைச்சர் பேச்சு



**புதுடெல்லி, அக். 15-**

பாகிஸ்தானை தவிர அண்டை நாடுகளுடனும் மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்று வெளியுறவு மந்திரி அமீர் கான் முத்தகி பேசினார்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் ஆட்சி செய்து வரும் தலீபான் அரசில் வெளியுறவு மந்திரியாக உள்ள அமீர் கான் முத்தகி முதன்முறையாக இந்தியாவுக்கு 6 நாள் அரசு முறை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவருடைய இந்த பயணத்தில், மத்திய வெளிவிவகார துறை மந்திரி ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் பிற அதிகாரிகளை நேரில் சந்தித்து பேசினார்.

டெல்லியில் முத்தகி செய்தியாளர்கள் சந்திப்பை நடத்தியபோது , பெண் நிருபர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த சந்திப்பில் பேசிய முத்தகி, இந்தியாவுக்கு எதிராக பல்வேறு தாக்குதல்களை நடத்திய லஷ்கர்-இ-தொய்பா மற்றும் ஜெய்ஷ்-இ-முகமது போன்ற பயங்கரவாத குழுக்களுக்கு நாங்கள் எந்தவித இடமும் அளிக்கவில்லை. அதனால், அமைதிக்காக நாங்கள் செய்ததுபோன்று பாகிஸ்தானும் செயல்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்நிலையில், அவர் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் கூறும்போது, நாங்கள் யாரிடமும் மோதல் போக்கை விரும்பவில்லை. ஆப்கானிஸ்தானில் அமைதி காணப்படுகிறது. பாகிஸ்தான் மட்டுமே எங்களுடைய நட்பு நாடு கிடையாது. எங்களுக்கு வேறு 5 அண்டை நாடுகளும் உள்ளன. அனைவரும் எங்களுடன் மகிழ்ச்சியாக உள்ளனர் என கூறினார். அவர் தொடர்ந்து பேசும்போது, மத்திய வெளிவிவகார மந்திரி எஸ். ஜெய்சங்கரை சந்தித்து பேசினேன். பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் பிற விவகாரங்கள் பற்றியும் பேசினேன் என்றும் கூறினார்.

பாகிஸ்தான் அமைதியை விரும்பவில்லை என்றால், எங்களுக்கு வேறு சில வாய்ப்புகளும் உள்ளன என்றார். எல்லை மோதலில் 50 பாகிஸ்தானிய வீரர்கள் கொல்லப்பட்டனர். ஆப்கானிஸ்தானின் 19 நிலைகளை பாகிஸ்தான் கைப்பற்றி உள்ளது. இந்த சூழலில், முத்தகியின் இந்திய பயணம் முக்கியம் பெற்றுள்ளது. இந்தியாவுடனான எங்களுடைய வர்த்தகம் 100 கோடி அமெரிக்க டாலரை (ரூ.8,865 கோடி) மிஞ்சியுள்ளது என்றும் அவர் கூறினார்.

# பாலஸ்தீன நாடு குறித்த கேள்வி: அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பதில்

**வாஷிங்டன், அக். 15-**

பாலஸ்தீன தனி நாடு பற்றிய கேள்விக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பதில் அளித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மத்திய கிழக்கு பகுதியில் மேற்கொண்ட சுற்றுப்பயணம் நிறைவடைந்த நிலையில், அமெரிக்காவுக்கு புறப்பட்டார். அப்போது அவர் ஏர் போர்ஸ் ஒன் விமானத்தில் ஏறுவதற்கு முன்பு நிருபர்கள் அவரை சூழ்ந்தனர். அவரிடம் பாலஸ்தீன தனி நாடு பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. பாலஸ்தீன நாட்டுக்கு நீங்கள் அங்கீகாரம் தருவீர்களா? என அப்போது கேட்கப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர், ஒற்றை நாடு, இரட்டை நாடு அல்லது 2 நாடு என்பது பற்றியெல்லாம் நான் பேசவில்லை. நாங்கள் காசாவை கட்டமைப்பது பற்றி பேசி வருகிறோம் என்றார்.

நிறைய பேர் ஒரு நாடு என்ற முடிவை விரும்புகின்றனர். சிலர் இரு நாடு வேண்டும் என விரும்புகிறார்கள். வருங்காலத்தில் பாலஸ்தீனம் தனி நாடு அமைப்பது பற்றிய அரசியல் சூழல் ஏற்படுவதற்கு சிறிது காலம் எடுக்கும். அதனை இனிதான் நாம் காண வேண்டும். அது பற்றி நான் எதுவும் கூற வில்லை என்று கூறினார். 2 ஆண்டுகளாக காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்ததில், 67 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். லட்சக்கணக்கான மக்கள் காயமடைந்தனர். இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தலைமையில் அமைதி பேச்சுவார்த்தைக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதில் பலன் ஏற்பட்டது.

இதன்படி, இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கு இடையேயான போர்நிறுத்தம் கடந்த 11-ந்தேதி அமலுக்கு வந்தது. இதனால், இரு தரப்பு பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்து உள்ளனர். எனினும், இதனை கண்காணிப்பதற்காக அமெரிக்க வீரர்கள் 200 பேர் காசாவுக்கு செல்வார்கள். தவிரவும், எகிப்து, கத்தார், துருக்கி, அமீரகத்தின் வீரர்களும் இந்த கண்காணிப்பு பணிகளில் ஈடுபட உள்ளனர்.

இந்நிலையில், காசாவில் அமைதி ஏற்படுவதற்கான போர்நிறுத்த ஒப்பந்தம் இறுதி செய்யப்படுவதற்காக, ட்ரம்ப் நேற்று முன்தினம் இஸ்ரேலுக்கு புறப்பட்டு சென்றார். அவர் ஏர் போர்ஸ் ஒன் விமானத்தில் ஏறுவதற்கு முன்பு பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது, காசா அமைதி முயற்சிகளுக்கு ஆதரவு சேர்ப்பதற்காக அனைத்து பகுதிகளிலும் உள்ள தலைவர்களை ஒன்றிணைப்பதற்காக நான் மத்திய கிழக்கிற்கு பயணம் மேற்கொள்கிறேன். நாங்கள் ஒவ்வொருவரையும் மகிழ்ச்சியடைய செய்ய போகிறோம் என்றார். யூதர்கள், முஸ்லிம்கள் மற்றும் அரபு நாடுகளை சேர்ந்தவர்கள் என அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று கூறினார். இஸ்ரேல் நாட்டுக்கு சென்று விட்டு அவர் எகிப்து நாட்டுக்கும் சென்றார். இந்த பயணத்தில், பணய கைதிகளின் குடும்பத்தினரை தனிப்பட்ட முறையில் சந்தித்து பேசினார்.

இதன்பின்னர் எகிப்தில் ஷார்ம் எல்-ஷேக் என்ற சுற்றுலா நகரில் நேற்று முன்தினம் மதியம் அமைதி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதில், ஆயுதங்களை ஹமாஸ் அமைப்பினர் குறைப்பது உள்ளிட்ட 21 அம்ச திட்டங்களை ட்ரம்ப் வெளியிட்டார். அப்போது எகிப்து ஜனாதிபதி அப்தில் பத்தா எல்-சிசி, பிராந்திய அமைதிக்கு இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த முடிவு என குறிப்பிட்டார். இதன் தொடர்ச்சியாக, ஹமாஸ் பிடித்து வைத்திருந்த இஸ்ரேல் பணய கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள் பின்னர் வீடு திரும்பி சொந்தங்களுடன் இணைந்தனர். இதனால், இஸ்ரேல் மற்றும் காசா பகுதியில் உள்ள பொதுமக்களிடையே, மீண்டும் மகிழ்ச்சி திரும்பியுள்ளது.

# மகாராஸ்டிராவிற்கு கடத்தி வரப்பட்ட ரூ.6 கோடி சீன பட்டாசுகள் பறிமுதல்

**மும்பை, அக். 15-**

மராட்டியத்திற்கு கடத்தி வரப்பட்ட ரூ. 6 கோடி மதிப்புள்ள சீன பட்டாசுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

நாட்டின் முக்கிய பண்டிகை தீபாவளி உள்ளது. இதனிடையே நடப்பு ஆண்டுக்கான தீபாவளி பண்டிகை வரும் 20ம் தேதி (திங்கட்கிழமை) கொண்டாடப்படுகிறது. தீபாவளி பண்டிகையொட்டி பட்டாசு, புத்தாடைகள் வாங்க கடைவீதிகளில் மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

இதனிடையே, இந்தியாவில் சீன பட்டாசுகள் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், சீன பட்டாசுகள் சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்டு இந்திய சந்தைகளில் விற்பனை செய்யப்படும் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இதை தடுக்க மத்திய, மாநில அரசுகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந்நிலையில், மராட்டிய மாநிலம் மும்பையில் உள்ள நவசேவா துறைமுகத்திற்கு சீனாவில் இருந்து பட்டாசுகள் கடத்தி கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் போலீசாருடன் விரைந்து சென்ற அதிகாரிகள் துறைமுகத்தில் தீவிர சோதனை நடத்தினர். அதில் அங்கு கண்டெய்னரில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 20 மெட்ரிக் டன் சீன பட்டாசுகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட சீன பட்டாசுகளின் மதிப்பு 6 கோடியே 32 லட்சம் ரூபாய் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரசுக்கு எதிராக போராட்டம்: மடகாஸ்கர் அதிபர் தப்பி ஓட்டம்

**அண்டனானரிவோ, அக். 15-**

கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு மடகாஸ்கர். அந்நாட்டின் அதிபராக அண்ட்ரே ரஜோலினா செயல்பட்டு வருகிறார். இதனிடையே, ஊழல், வறுமை, மின் தடுப்பாடு, தண்ணீர் தட்டுப்பாடு உள்பட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த மாதம் 25ம் தேதி தொடங்கிய போராட்டம் அதிபர் ரஜோலினாவுக்கு எதிராகவும், அவரது அரசுக்கு எதிராகவும் திரும்பியது. மேலும், அந்நாட்டு ராணுவத்தின் கெப்சேட் எனப்படும் முக்கிய படைப்பிரிவு அதிபரின் உத்தரவுகளை ஏற்க மறுத்து, அரசுக்கு எதிராக திரும்பியது. இந்நிலையில், போராட்டம் தீவிரமடைந்த நிலையில் அதிபர் ரஜோலினா நாட்டை விட்டு தப்பியோடியுள்ளார். அவர் பிரான்ஸ் ராணுவ விமானத்தில் நாட்டை விட்டு தப்பிச்சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது. அதிபர் தப்பியோடியதையடுத்து ராணுவத்தின் கெப்செட் படைப்பிரிவு தலைநகர் பல்வேறு பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துள்ளது. முன்னதாக பிரான்சின் காலனி ஆதிக்க நாடாக மடகாஸ்கர் இருந்து வந்தது. காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலையான பின்னும் மடகாஸ்கரில் தனது படைப்பிரிவுகளை பிரான்ஸ் நிலை நிறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீரில் ஊடுருவ முயன்ற

# 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

**ஸ்ரீநகர், அக். 15-**

காஷ்மீரில் ஊடுருவ முயன்ற 2 பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகளை ஒழிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் எல்லைப் பகுதியில் ரோந்து பணிகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. இந்த நிலையில் வடக்கு காஷ்மீர் மாநிலம் குப்வாரா மாவட்டத்தின் குய்காமட் பகுதியில் சர்வதேச எல்லைக் கட்டுப்பாட்டு கோடு அருகே தீவிரவாதிகள் சிலர் சந்தேகத்திற்கிடமாக நடமாடுவதாக தகவல் கிடைத்தது.

இதையடுத்து பாதுகாப்புப் படை வீரர்கள் அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு பாதுகாப்புப் படை வீரர்களும் திருப்பிச் சுட்டனர். இந்த சண்டையில் 2 தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

இதனால் அவர்கள் எல்லையில் ஊடுருவும் முயற்சி தடுக்கப்பட்டதுடன், அவர்களின் சதித் திட்டமும் முறியடிக்கப்பட்டது. தீவிரவாதிகள் குறித்த விவரங்களை பாதுகாப்புப் படையினர் சேகரித்து வருகின்றனர். தொடர்ந்து அப்பகுதியில் தீவிரவாதிகளை தேடி கண்டுபிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாதுகாப்புப் பணியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# சீனாவில் பள்ளிகளில் இந்தி பாடம் கற்பித்தல் தொடக்கம்

**ஷாங்காய், அக். 15-**

சீனாவில் பள்ளிகளில் இந்தி பாடம் கற்பித்தல் தொடங்கப்பட்டது.


வெளிநாடுகளுக்கு சென்று மேல் படிப்பை படிக்கும் இந்திய மாணவர்களின் விருப்ப தேர்வாக உள்ள நாடுகளில் சீனாவும் ஒன்று. அந்நாட்டின் ஷாங்காய் நகரில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட செய்தியின்படி, எம்.பி.பி.எஸ். படிப்புகளை தொடர்வதற்காக இந்திய மாணவர்கள் அதிக அளவில் சீனாவுக்கு செல்கின்றனர். இந்நிலையில், சீனாவில் இந்தியை படிக்கும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை சீராக அதிகரித்து வருகிறது.

இதன்படி, பல்கலைக்கழக அளவில் சர்வதேச படிப்புகளுக்கான துறைகளில் இந்தியும் ஒன்றாக உள்ளது. இந்நிலையில், சீனாவில் உள்ள பள்ளிகளிலும் இந்தியை பாடப்பிரிவில் ஒன்றாக சேர்த்துள்ளனர். இதனை முன்னிட்டு, சீனாவுக்கான இந்திய தூதர் பிரதீப் குமார் ராவத், ஷாங்காய் நகரில் உள்ள இந்திய தூதரக அதிகாரி பிரதீக் மாத்தூர் ஆகியோர், இந்தி பயிற்றுவிப்பாளரான பவ்யா மேத்தாவை ஷாங்காய் நகரில் நேற்று கவுரவித்தனர்.

இதன்படி அவர் பிரிட்டானிகா சர்வதேச மேனிலைப் பள்ளியில் இந்தியை பயிற்றுவிப்பார். இதன்படி, சீனாவில் உள்ள பள்ளிகளில் முதன்முறையாக இந்தி பாடம் கற்பிக்கப்பட உள்ளது. இதனால், இரு நாடுகளின் வருங்கால தலைமுறையினர் இடையே ஆழ்ந்த கலாசார உறவுக்கான புதிய சாத்தியக்கூறுகளும் ஏற்படும். பவ்யா, இந்தியாவின் போர் வீரரான கீர்த்தி சக்ரா விருது பெற்ற பிரிகேடியர் ரவி தத் மேத்தாவின் மகள் ஆவார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**15-10-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** அன்னையின் உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். வாகனங்களில் அடிக்கடி பழுது ஏற்படுவதன் காரணமாக பயண சுகம் குறையும். நீர்நிலைகளில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**ரிஷபம்:-** அதிக தனலாபம், புதிய நண்பர்கள், எதிர்பாலர் பால் ஈர்ப்பு மற்றும் ஏற்றங்கள் ஏற்படும். தொழில் ஆர்வம் கூடுவதால், ஆதாயம் பெருகும். வெற்றியும் கிடைக்கும்.

**மிதுனம்:-** தேவையற்ற மன சஞ்சலங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சிலருக்கு வழக்குகளால் வீண் செலவுகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படும்.

**கடகம்:-** ஆரோக்கியம் மேம்பட்டு தேக சுகம் கூடும். படுக்கை சுகம், நண்பர்கள் சந்திப்பு ஆகியவை ஏற்படும். பணவரவு கூடும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும்.

**சிம்மம்:-** பணிச்சுமை காரணமாக சரியான நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். முன் கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**கன்னி:-** பலவகைகளிலும் பணம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. நண்பர்கள் சந்திப்பாலும், தெய்வ பக்தியாலும் மனநிம்மதி கூடும்.

**துலாம்:-** தீர்த்த யாத்திரை செல்லும் பாக்கியம் ஏற்படும். நல்ல காரியங்களில் ஈடுபடுவதை தொடர்ந்தால் புகழ் ஓங்கும். உயர் அதிகாரப் பதவிகள் கிடைப்பதால் அந்தஸ்தும், மரியாதையும் உயரும்.

**விருச்சிகம்:-** பாக்கிய விருத்தியால் மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். அதிகார பதவி கிடைக்கும். வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**தனுசு:-** பொருள் இழப்பை தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத வகையில் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு தொழிலில் லாபம் ஏற்படும்.

**மகரம்:-** புதிய வாகன சுகங்கள் உண்டாகும். புதிய சொத்துக்கள் அமையும். விரும்பிய பொருட்கள், விரும்பியபடி கிடைக்கும். கல்வியில் வெற்றி பெற கடின உழைப்பு தேவை.

**கும்பம்:-** சுகமான பயணங்களால் சந்தோஷம் பெருகும். எதிர்பார்த்த இடங்களில் இருந்து தனவரவு கிடைக்கும். பெயரும், புகழும் ஓங்கும். எடுத்த காரியங்கள் யாவற்றிலும் வெற்றி கிடைக்கும்.

**மீனம்:-** மதிப்பு மரியாதைக் குறைவு ஏற்படும். அமைதியற்ற வாழ்க்கை அமையும். குழந்தைகளின் உடல் நிலையில் அக்கறை தேவை. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

## பி.எப். ஓய்வூதியத்தை உயர்த்துவது

# அமைச்சரவை பரிசீலனை: மத்திய அமைச்சர் தகவல்

**புதுடெல்லி, அக். 15-**

பி.எப். ஓய்வூதியத்தை உயர்த்துவது அமைச்சரவையின் பரிசீலனையில் உள்ளது என்று மத்திய மந்திரி தகவல் தெரிவித்தார்.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களின் வாழ்க்கையை எளிதாக்குவதற்காக மத்திய அறங்காவலர் குழு திட்டத்தின் பகுதியளவு பணத்தைத் திரும்பப் பெறும் விதிகளை எளிமைப்படுத்த முடிவு செய்தது. 13 சிக்கலான விதிகளை ஒன்றிணைத்து, அத்தியாவசியத் தேவைகள் (நோய், கல்வி, திருமணம்), வீட்டுவசதித் தேவைகள் மற்றும் சிறப்புச் சூழ்நிலைகள் என மூன்று வகைகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

புது டெல்லியில் நேற்று நடைபெற்ற தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் மத்திய அறங்காவலர் குழு கூட்டத்தில், குறைந்தபட்ச ஓய்வூதியத்தை அதிகரிப்பது குறித்து அமைச்சரவை தீவிரமாக பரிசீலித்து வருவதாக மத்திய தொழிலாளர் நலத்துறை மந்திரி மன்சுக் மாண்டவியா தெரிவித்தார். இந்தப் பிரச்சினை நிகழ்ச்சி நிரலில் இல்லை என்றாலும், மத்திய அறங்காவலர் குழுவில் உள்ள தொழிற்சங்க உறுப்பினர்கள் விவாதங்களின் போது குறைந்தபட்ச ஓய்வூதியத்தை தற்போதைய மாதத்திற்கு ரூ.1,000-ல் இருந்து திருத்த வேண்டும் என்று கூறினர். "அமைச்சர் அதை நிராகரிக்கவில்லை, அமைச்சரவை இந்த திட்டத்தை தீவிரமாக பரிசீலித்து வருவதாகக் கூறினார்" என்று மத்திய அறங்காவலர் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி அதிக ஓய்வூதியம் வழங்குவதில் ஏற்படும் தாமதம் குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. பல்வேறு ஐ கோர்ட்டு உத்தரவுகளின் பின்னணியில், தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில மத்திய அறங்காவலர் குழு உறுப்பினர்கள், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் இந்த விஷயத்தில் உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல்களை திரும்பப் பெற வேண்டும் என்றும், சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுக்கு ஏற்ப புதிய வழிகாட்டுதல்களை செயல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர். "பதில் நேர்மறையானதாக இல்லை" என்று மற்றொரு உறுப்பினர் கூறினார்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் ஒரு அறிக்கையில், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பகுதி திரும்பப் பெறும் விதிகளை எளிமைப்படுத்துதல் மற்றும் தாராளமயமாக்குதல் உள்ளிட்ட பல புரட்சிகரமான முடிவுகளை இந்த கூட்டம் எடுத்ததாகக் கூறியது. "தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களின் வாழ்க்கை வசதியை மேம்படுத்துவதற்காக, அத்தியாவசியத் தேவைகள் (நோய், கல்வி, திருமணம்), வீட்டுத் தேவைகள் மற்றும் சிறப்பு சூழ்நிலைகள் என மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்ட ஒற்றை, நெறிப்படுத்தப்பட்ட விதியாக 13 சிக்கலான விதிகளை இணைப்பதன் மூலம் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தின் பகுதி திரும்பப் பெறும் விதிகளை எளிமைப்படுத்த சிபிடி முடிவு செய்தது. இப்போது, தொழிலாளர் மற்றும் முதலாளி பங்குகள் உட்பட, வருங்கால வைப்பு நிதியில் உள்ள தகுதியான நிலுவைத் தொகையில் 100 சதவீதம் வரை உறுப்பினர்கள் திரும்பப் பெற முடியும்," என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பணம் எடுப்பதற்கான வரம்புகளும் தாராளமயமாக்கப்பட்டு உள்ளன. கல்வி பணத்தை 10 முறை வரையிலும், திருமண பணத்தை 5 முறை வரையிலும் எடுக்க அனுமதிக்கப்படும் (திருமணம் மற்றும் கல்விக்கான மொத்த 3 பகுதி பணத்தை எடுப்பதற்கான தற்போதைய வரம்பிலிருந்து). "அனைத்து பகுதி பணத்தை எடுப்பதற்கும் குறைந்தபட்ச சேவையின் தேவை ஒரே மாதிரியாக 12 மாதங்களாக மட்டுமே குறைக்கப்பட்டுள்ளது" என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பகுத்தறிவு தண்டனை இழப்பீடுகள் மூலம் வழக்குகளைக் குறைப்பதற்காக 'விஸ்வாஸ் திட்டத்தை' தொடங்கவும் கூட்டம் முடிவு செய்தது. "வழக்குகளுக்கான முக்கிய காரணங்களில் ஒன்று, பி.எப். நிலுவைத் தொகையை தாமதமாக அனுப்புவதற்கு இழப்பீடு விதிப்பது ஆகும். மே 2025 நிலவரப்படி, நிலுவையில் உள்ள தண்டனை இழப்பீடுகள் ரூ.2,406 கோடியாக உள்ளன, ஐ கோர்ட்டுகள், சிஜிஐடிகள் மற்றும் சுப்ரீம் கோர்ட்டு உள்ளிட்ட மன்றங்களில் 6,000க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. மேலும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் மின்-நடவடிக்கைகள் போர்ட்டலின் கீழ் கிட்டத்தட்ட 21,000 சாத்தியமான வழக்குகள் நிலுவையில் உள்ளன" என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இ.பி.எப்.'95 ஓய்வூதியதாரர்களுக்கு, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு சான்றிதழுக்கு ரூ.50 செலவில், வீட்டு வாசலில் டிஜிட்டல் வாழ்க்கை சான்றிதழ் சேவைகளை வழங்குவதற்காக, இந்தியா போஸ்ட் பேமென்ட்ஸ் வங்கியுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மத்திய அறங்காவலர் குழு ஒப்புதல் அளித்தது. 3.0-ன் ஒரு பகுதியாக, வருங்கால வைப்பு நிதி சேவைகளை நவீனமயமாக்குவதற்கான விரிவான உறுப்பினர்-மையப்படுத்தப்பட்ட டிஜிட்டல் உருமாற்ற கட்டமைப்பை மத்திய அறங்காவலர் குழு அங்கீகரித்தது.

## டாஸ்மாக் முறைகேடு வழக்கு:

# அமலாக்கத்துறைக்கு சுப்ரீம் கோர்ட் கேள்வி

**புதுடெல்லி, அக். 15-**

டாஸ்மாக் முறைகேடு வழக்கு தொடர்பாக அமலாக்கத்துறைக்கு சுப்ரீம் கோர்ட் கேள்வி எழுப்பியுள்ளது.

தமிழகத்தில் டாஸ்மாக் மது பானக் கடைகளில், அதிக விலைக்கு மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவது, பார் உரிமம் வழங்குவதில் முறைகேடு உள்ளிட்ட புகார்களில்மோசடிகள் நடந்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக 2017 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை பதிவு செய்த 41 வழக்குகளின் அடிப்படையில், அமலாக்கத்துறை சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்தது.

தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் சென்னையில் உள்ள டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர். இந்த விவகாரத்தில், தமிழக அரசு மற்றும் டாஸ்மாக் நிர்வாகத்தின் மேல்முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணை நேற்று சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையில் நடைபெற்றது. அப்போது சுப்ரீம் கோர்ட் அமலாக்கத்துறைக்கு அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியது. "அமலாக்கத்துறை என்ன நினைத்துக் கொண்டு செயல்படுகிறது?" எனக் கேட்ட தலைமை நீதிபதி, "மாநில விசாரணை அதிகாரத்தின் உரிமையை பறிக்க முயலுகிறதா?" என்றார்.

சந்தேகம் இருந்தாலே அலுவலகத்துக்குள் நுழைந்து ஆவணங்களை எடுத்துச் செல்வது எவ்வாறு சரியாகும்? ஒரு அதிகாரி தவறு செய்திருந்தால், அவரிடம் தனிப்பட்ட முறையில் விசாரணை நடத்தியிருக்க வேண்டும். சிபிஐ கூட சோதனை செய்வதற்கு முன்பு சம்பந்தப்பட்ட அரசிடம் தகவல் அளிக்கிறது" என்றும் நீதிபதி கடுமையாக கண்டனம் தெரிவித்தார்.

# சீமான் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை, அக். 15-**

சீமான் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அரசியல் தலைவர்கள், நடிகர், நடிகைகள் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுப்பது தொடர்கதையாகி வருகிறது. அந்த வகையில், கடந்த 10-ந் தேதி சென்னை துரைப்பாக்கம். சோழிங்கநல்லூரில் செயல்பட்டு வரும் ஐ.டி. நிறுவனங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டது. இதில், துரைப்பாக்கத்தில் உள்ள 10 மாடி கட்டிடமான சென்னை ஒன் ஐ.டி. வளாகம், சோழிங்கநல்லூரில் உள்ள இன்போசிஸ் ஐ.டி. நிறுவனங்களுக்கு இமெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டது.

இதனையடுத்து, விரைந்து சென்ற வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள், போலீசார் ஐ.டி. நிறுவனங்களில் தீவிர சோதனை நடத்தினர். இந்த வெடிகுண்டு மிரட்டலை தொடர்ந்து ஐ.டி.நிறுவனங்களுக்கு பணிக்கு வந்த ஊழியர்களை வீட்டிற்கு திரும்பி செல்ல நிறுவனங்கள் அறிவுறுத்தின. இதில் வெடிகுண்டு எதுவும் இல்லை என்றும் அது வெறும் புரளி என்றும் தெரிய வந்தது.

கடந்த 11-ந்தேதி, முதல்வர் மு.க.ஸ்டாலின், நடிகர் ரஜினிகாந்த் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டது. மோப்ப நாய் உதவியுடன் சோதனை செய்ததில் அது வெறும் புரளி என தெரிய வந்தது. கடந்த 3 தினங்களுக்கு முன்பு சென்னை கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டது. இதுவும் புரளி என தெரிய வந்தது.இதேபோன்று, சென்னை தியாகராயர் நகரில் உள்ள நடிகர் டி.ராஜேந்தர் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டு, பின்னர் அது புரளி என தெரிய வந்தது.

இந்நிலையில், சென்னை நீலாங்கரையில் உள்ள நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டது. டி.ஜி.பி. அலுவலகத்திற்கு செல்போன் மூலம் தொடர்பு கொண்ட மர்ம நபர் ஒருவர் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தார். அவர் உடனடியாக தொடர்பை துண்டித்து விட்டார். அவர் யாரென்ற விவரம் தெரிய வரவில்லை. இதனை தொடர்ந்து போலீசாரும், வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்களும் வரவழைக்கப்பட்டு, மோப்பநாய் உதவியுடன் வெடிகுண்டை தேடும் பணி நடந்தது. இதில் வெடிகுண்டு எதுவும் இல்லை என்றும் அது வெறும் புரளி என்றும் தெரிய வந்தது.

# சர்வதேச விதிகளை சில நாடுகள் வெளிப்படையாக மீறுகின்றன

## அமைச்சர் ராஜ்நாத்சிங் குற்றச்சாட்டு



**புதுடெல்லி, அக். 15-**

உலக நாடுகளில் அமைதிக்காப்பு பணிகளில் இந்திய ராணுவ பெண் அதிகாரிகளின் பங்களிப்பு உள்ளதாக பெருமிதம் தெரிவித்த மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், சர்வதேச விதிகளை சில நாடுகள் வெளிப்படையாக மீறுகின்றன என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சர்வதேச அமைதிக் காப்பு படைகளுக்கு வீரர்களை அனுப்பி பங்களிப்பு செய்யும் நாடுகளின் தலைமை ராணுவ அதிகாரிகள் மாநாடு நாளை வரை டெல்லியில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டை இந்தியா முதல்முறையாக தலைமை தாங்கி நடத்துகிறது. மாநாட்டின் தொடக்க விழாவில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது:-

உலக நாடுகள் பலவற்றில் அமைதிக்காப்பு பணிகளில் பணியாற்றும் இந்திய ராணுவ பெண் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பகுதிகளில் நம்பிக்கையை வளர்த்து வருகிறார்கள். இப்படைகளில் பெண்கள் செயல்படுவது அமைதி காக்கும் பணியின் செயல்திறனை மேம்படுத்துகிறது, உள்ளூர் மக்களிடம் நம்பிக்கையை உருவாக்குகிறது.

இந்த சேவையில் இந்தியா முன்னோடியாக இருந்து வருகிறது. 2007-ம் ஆண்டு லைபீரியாவில் பணியமர்த்தப்பட்ட எங்கள் அனைத்து மகளிர் பாதுகாப்பு பிரிவு, ஒரு உலகளாவிய அடையாளமாக மாறியது. அவர்களின் தொழில்முறை மற்றும் புரிதலுடன் கூடிய சேவை, லைபீரியப் பெண்களின் ஒரு தலைமுறையை அவர்களின் தேசிய காவல்துறையில் சேரத் தூண்டியது.

தொடர்ந்து பேசுகையில், அமைதி காக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து சீராக நடைபெற அனைத்து உறுப்பு நாடுகள், குறிப்பாக மேம்பட்ட தொழில்நுட்ப திறன்களைக் கொண்டவர்கள், தங்களது துருப்புக்கள், தளவாடங்கள், தொழில்நுட்பம் போன்றவை மூலம் தங்கள் ஆதரவை அதிகரிக்க வேண்டும்.

இப்போதெல்லாம், சில நாடுகள் சர்வதேச விதிகளை வெளிப்படையாக மீறுகின்றன, அதே நேரத்தில் சில நாடுகள் தன்னிச்சையான விதிகளை உருவாக்கி அடுத்த நூற்றாண்டில் ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றன. இந்தியா, சர்வதேச விதிகள் சார்ந்த ஒழுங்கை நிலைநிறுத்துவதில் வலுவாக நிற்கிறது. இந்தியா மகாத்மா காந்தியின் பூமி, இங்கு அமைதி, அகிம்சை ஆகியவை ஆழமாக வேரூன்றியுள்ளது. மகாத்மா காந்தியைப் பொறுத்தவரை, அமைதி என்பது போர் இல்லாதது மட்டுமல்ல, நீதி, நல்லிணக்கம் மற்றும் தார்மீக வலிமையம். இவ்வாறு அவர் கூறினார்.

## வருங்கால வைப்புநிதியில் இருந்து இனி 100 சதவீதம் வரை பணம் எடுக்கலாம்

**புதுடெல்லி, அக். 15-**

வருங்கால வைப்புநிதியில் இருந்து இனி 100 சதவீதம் வரை பணம் எடுக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அமைப்பின் (இ.பி.எப்.ஓ) முடிவு எடுக்கும் உயரிய அமைப்பான மத்திய அறங்காவலர்கள் வாரிய கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு மத்திய தொழிலாளர்துறை மந்திரி மன்சுக் மாண்டவியா தலைமை தாங்கினார். இதில், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களின் வாழ்க்கையை எளிதாக்கும் வகையில், வைப்புநிதியில் பகுதி அளவுக்கு பணம் எடுப்பதற்கான விதிமுறைகளை எளிமைப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

அத்தியாவசிய தேவைகள் (உடல்நலக்குறைவு, கல்வி, திருமணம்), வீட்டு தேவைகள், சிறப்பு சூழ்நிலை என 3 பிரிவாக விதிமுறைகள் வகைப்படுத்தப்பட்டன. தொழிலாளர் பங்களிப்பு, நிறுவனத்தின் பங்களிப்பு உள்பட வைப்புநிதியில் தகுதியான இருப்பில் 100 சதவீதம் வரை பணம் எடுத்துக்கொள்ளலாம். கல்வி தேவைக்காக 3 முறைக்கு பதிலாக 10 முறையும், திருமண தேவைக்காக 3 முறைக்கு பதிலாக 5 முறையும் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

பேரிடர், வேலையின்மை போன்ற சிறப்பு சூழ்நிலை பிரிவில் தேவைக்கான காரணத்தை குறிப்பிடத் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் உறுப்பினர்களின் எதிர்கால தேவைக்காக உறுப்பினர் கணக்கில் 25 சதவீத பங்களிப்பு குறைந்தபட்ச இருப்பாக எப்போதும் பராமரிக்க வேண்டும் என்ற விதிமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

## கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாதம் ரூ.5 ஆயிரம் வழங்கப்படும்: த.வெ.க. நிர்வாகி

**கரூர், அக். 15-**

கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாதம் ரூ. 5 ஆயிரம் வழங்கப்படும் என்று த.வெ.க. நிர்வாகி அறிவித்துள்ளார்.

கரூரில் கடந்த மாதம் 27-ம் தேதி த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொண்டபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக த.வெ.க. கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு அடைக்கலம் கொடுத்ததாக த.வெ.க. கரூர் நகர பொறுப்பாளர் பவுன்ராஜையும் போலீசார் கைது செய்துள்ளனர். கரூர் கூட்ட நெரிசல் த.வெ.க பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த், த.வெ.க. மாநில இணை செயலாளர் நிர்மல் குமார் உள்பட சிலர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இதனிடையே, கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 20 லட்ச ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று த.வெ.க. தலைவர் விஜய் அறிவித்துள்ளார். இந்நிலையில், கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாதம் தலா 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று த.வெ.க. நிர்வாகியும், ஜேப்பியார் தொழில்நுட்ப கல்லூரி தலைவருமான மரிய வில்சன் தெரிவித்துள்ளார்.

## சாதி பெயர்களில் மாற்றம் வேண்டும்: முதல்வரிடம் திருமாவளவன் கோரிக்கை

**சென்னை, அக். 15-**

சாதி பெயர்களில் மாற்றம் வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் திருமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

முதல்வர் மு.க. ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் சந்தித்து பேசினார். அப்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், விசிக சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனை செல்வன், எஸ்.எஸ். பாலாஜி, ஜெ. முகம்மது ஷா நவாஸ், எம். பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த சந்திப்பின்போது சாதி பெயர்களில் உள்ள 'ன்' எழுத்தை நீக்கி 'ர்' சேர்க்க வேண்டும் என முதல்வரிடம் வி.சி.க. தலைவர் திருமாவளவன் கோரிக்கை வைத்துள்ளார். அத்துடன் தெருக்களில் உள்ள சாதி பெயர்களை நீக்கும் அரசாணைக்கு நன்றி கூறியதுடன் இடைநிலை, பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# சட்டசபையில் அன்புமணி ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் திடீர் போராட்டம்



**சென்னை, அக். 15-**

சட்டசபையில் அன்புமணி ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதையடுத்து அங்கு திடீர் பரபரப்பு நிலவியது.

பரபரப்பான அரசியல் சூழலுக்கிடையே தமிழக சட்டசபை நேற்று கூடியது. சட்டசபை வரும் வெள்ளிக்கிழமை வரை 4 நாட்கள் நடைபெறுகிறது. சட்டசபை நடவடிக்கையில் திமுக, அதிமுக உள்பட பல்வேறு கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில், சட்டசபை கூட்டத்தில் பங்கேற்க வந்த அன்புமணி ராமதாஸ் ஆதரவு பா.ம.க. எம்.எல்.ஏ.க்கள் 3 பேர் திடீரென சட்டசபை வளாகத்திலேயே தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். பா.ம.க. சட்டமன்ற குழு தலைவர் பதவியில் இருந்து ஜி.கே.மணியை நீக்க வலியுறுத்தி கோஷம் எழுப்பி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், சட்டசபையில் பரபரப்பு ஏற்பட்டது.

# திண்டுக்கல் தெற்கு த.வெ.க. மாவட்ட செயலாளர் நிர்மல் குமாருக்கு ஜாமீன்

**திண்டுக்கல், அக். 15-**

திண்டுக்கல் தெற்கு த.வெ.க. மாவட்ட செயலாளர் நிர்மல் குமாருக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.



கரூரில் கடந்த சில நாட்களுக்கு முன்பு த.வெ.க. தலைவர் விஜய் கலந்து கொண்ட பிரசார கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையின் போது விஜய் குறித்து சில கருத்துக்களை சென்னை ஐகோர்ட் நீதிபதி செந்தில்குமார் தெரிவித்து இருந்தார்.

இதனையடுத்து, வழக்கை விசாரித்த நீதிபதி குறித்து சமூகவலைத்தளத்தில் அவதூறு கருத்துகள் பரப்பப்பட்டு வருகின்றன. அதேவேளை, அவதூறுகள் பரப்பியவர்கள் மீது வழக்குப்பதிவும் செய்யப்படுகின்றன.

இந்தநிலையில் சாணார்பட்டி அருகே உள்ள பெத்தாம்பட்டியை சேர்ந்த திண்டுக்கல் தெற்கு மாவட்ட த.வெ.க. செயலாளரான நிர்மல் குமார் (வயது 35). இவர், முகநூல் பக்கத்தில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் நீதிபதிக்கு எதிராக சில கருத்துக்களை பதிவு செய்திருந்தார். இது சமூக வலைதளங்களில் பரவியது. இதைத் தொடர்ந்து சாணார்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து, நிர்மல்குமாரை கைது செய்தனர். தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இதனையடுத்து அவர் ஜாமீன் கோரி திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார். இந்த மனுவை நேற்று விசாரித்த நீதிமன்றம் நிர்மல் குமாருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது.

# மனிதராக இருப்பதற்கு கூட தகுதியற்றவர்: சி.வி.சண்முகத்திற்கு அமைச்சர் கண்டனம்

**சென்னை, அக். 14-**

மனிதராக இருப்பதற்கு கூட தகுதியற்றவர் சி.வி.சண்முகம் என்று அமைச்சர் கீதா ஜீவன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

அரசின் இலவசத் திட்டங்களோடு பெண்களையும் ஒப்பிட்டு, அருவருக்கத்தக்க கருத்தை வெளியிட்டிருக்கிறார் அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம். அ.தி.மு.க. பூத் கமிட்டி பயிற்சிக் கூட்டத்தில் பேசிய அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும் மாநிலங்களவை உறுப்பினருமான சி.வி.சண்முகம், ''தேர்தலுக்குப் பல அறிவிப்புகள் வரும். இலவசமாக மிக்ஸி, கிரைண்டர், ஆடு, மாடு, ஏன் ஆளுக்கு ஒரு மனைவியையும் கூட இலவசமாக வழங்குவார்கள்'' என மிகக் கீழ்த்தரமாக விமர்சித்திருக்கிறார்.

திராவிட மாடல் அரசு மக்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. குறிப்பாக மகளிர் முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சொந்தக் காலில் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள மகளிர் விடியல் பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம், புதுமைப் பெண் திட்டம், பணிபுரியும் மகளிர்க்கு தோழி விடுதிகள் திட்டம், சுய உதவி குழு மகளிருக்கு கடன் வரம்பை அதிகரிக்கும் திட்டம், மகளிரை தொழில் முனைவோர் ஆக்கும் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்தி, பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்தி வருகிறது.

பொண்டாட்டிகளையும் இலவசமாகத் தருவார்கள்'எனப் பெண்களை இலவசத்தோடு ஒப்பிட்டுக் கொச்சைப்படுத்தியிருக்கிறார் சி.வி.சண்முகம். அ.தி.மு.க.வுக்குப் பெண்கள் மீது இருக்கும் வக்கிரமும் வன்மமும் வெளிப்பட்டிருக்கிறது. ஓர் அரசியல்வாதியாக அல்ல. அடிப்படையில் ஒரு மனிதராகவே இருப்பதற்குக் கூட தகுதியற்றவர் சி.வி.சண்முகம். ஜெயலலிதா இருக்கும் போது சி.வி.சண்முகம் இப்படிப் பேசியிருக்க முடியுமா? அவரை இருக்கும் இடம் தெரியாமல் அரசியலில் இருந்தே அப்புறப்படுத்தியிருப்பார் ஜெயலலிதா. ஆளுமை இல்லாத எடப்பாடி பழனிசாமி ஒரு கண்டிப்பைக்கூடச் செய்யவில்லை.

எடப்பாடி பழனிசாமி வீட்டிலும் பெண்கள் இருக்கத்தானே செய்வார்கள். அவர்களுக்கும் சேர்த்துத் தானே சேற்றை வாரி வீசியிருக்கிறார் சி.வி.சண்முகம். அந்த சொரணைகூட பழனிசாமிக்கு இருக்காதா? ஒருவர் அடிமையாய் மாறிவிட்டால், அவரிடம் ஆளுமையும் சூடு சொரணையும் எப்படி இருக்கும்? உங்கள் வீட்டுப் பெண்கள் எல்லாம் உங்களைப் பார்த்து என்ன நினைப்பார்கள்?.

மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், புதுமைப் பெண் போன்ற பொருளாதாரத் தன்னிறைவு திட்டங்களால் பெண்கள் முன்னேறி வருகிறார்கள். அது அ.தி.மு.க.வுக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் பெண் இனத்தைக் குறிக்கும் வகையில் 'பொண்டாட்டி இலவசம்'என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். கெட்ட வார்த்தைகளில் திட்டுவதற்குக் கூட பெண் இனத்தைப் பயன்படுத்தும் கேடு கெட்டவர் சி.வி.சண்முகம்.

பெண்களை அவதூறாகப் பேசிய அரசியல்வாதிகள் தங்கள் பதவிகளை இழந்த வரலாறு நிறைய உண்டு. பெண்களை இழிவுபடுத்தி வரும் அ.தி.மு.க.வுக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் 2026 சட்டப் பேரவைத் தேர்தலில் மக்கள் தக்கப் பதிலடிக் கொடுத்து பாடம் புகட்டுவார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பீகார் தேர்தலில் தொகுதிப் பங்கீடு: ஆர்.ஜே.டி. 135, காங்கிரஸ் 61 தொகுதிகளில் போட்டி..?

**புதுடெல்லி, அக். 15-**

பீகார் தேர்தலில் தொகுதிப் பங்கீட்டில் ஆர்.ஜே.டி. 135, காங். 61 இடங்களில் போட்டியிட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான மெகா கூட்டணியின் தொகுதிப் பங்கீடு முடிவாகி உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்.ஜே.டி.) 135, காங்கிரஸ் 61 தொகுதிகளில் போட்டியிடும் எனத் தெரிகிறது.

பீகாரில் ஐக்கிய ஜனதா தளம் தலைவர் நிதிஷ்குமார் தலைமையில் தேசிய ஜனநாயக முன்னணி ஆள்கிறது. இதன் இரண்டு துணை முதல்வர்களுடன் முக்கிய கூட்டணியாக பாஜக உள்ளது. தேசிய அளவிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணியான இண்டியாவின் உறுப்பினர்களுடன் மெகா கூட்டணி அமைந்துள்ளது. ஆர்.ஜே.டி. தலைமையிலான இந்த கூட்டணியின் தொகுதிப் பங்கீட்டில் இழுபறி இருந்தது.

கடைசியாக நேற்று காலை தொகுதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளது. அதன்படி, அந்த மெகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக லாலுவின் மகனான தேஜஸ்வி யாதவ் அறிவிக்கப்பட்டுள்ளார். இவரது பெயரை அறிவிக்க காங்கிரஸும் ஒப்புக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

மெகா கூட்டணி கட்சித் தலைவர்கள் வட்டாரத் தகவல்களின்படி, பீகாரின் முக்கிய எதிர்க்கட்சியான ஆர்.ஜே.டி. அதிக இடங்களாக 135 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அடுத்ததாக, காங்கிரஸுக்கு 61 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. விகாஷீல் இன்சான்(விஐபி) 16, இடது சாரிகளுக்கு 29 முதல் 31 தொகுதிகளும் கிடைத்துள்ளன. இருப்பினும், மெகா கூட்டணியால் திட்டமிடப்பட்ட துணை முதல்வர்கள் குறித்து தற்போது எந்த அறிவிப்பும் வெளியாகாது என தெரிகிறது. இதனிடையே, துணை முதல்வர் வேட்பாளராக தனது பெயரை அறிவிக்க விஐபி (விகாஷீல் இன்சான்) கட்சித் தலைவர் முகேஷ் சாஹ்னி கோரிக்கை விடுத்துள்ளார்.

பீகாரில் கடந்த 2020 சட்டப்பேரவைத் தேர்தலில், ஆர்.ஜே.டி. 144 இடங்களில் போட்டியிட்டு 75 இடங்களில் வெற்றி பெற்று மிகப் பெரிய கட்சியாக உருவெடுத்தது. இருப்பினும், இந்த முறை அந்தக் கட்சி குறைவான இடங்களில் போட்டியிடும் எனத் தெரிகிறது. கடந்த முறை காங்கிரஸ் 70 இடங்களில் போட்டியிட்டு மிகக்குறைந்ததாக 19 எம்எல்ஏ-க்களை பெற்றது. இதில் ராகுல் காந்தி உள்ளிட்டக் காங்கிரஸ் தலைவர்கள் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யாதது அதன் காரணம் எனப் புகார் எழுந்தது. காங்கிரஸின் இந்த தவறான நடவடிக்கையால் தான் தலைவர் தேஜஸ்வி யாதவ், பீகாரில் ஆட்சி அமைக்கும் வாய்ப்பை இழந்ததாக ஆர்.ஜே.டி. கட்சியினர் புலம்பி வந்தது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு: 3 பேருக்கு ஜாமீன்

**சென்னை, அக். 15-**

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 3 பேருக்கு ஜாமீன் வழங்கப்பட்டது.

பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த ஆண்டு ஜூலை 5-ந்தேதி தனது வீட்டிற்கு அருகே வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இது குறித்து செம்பியம் போலீசார் வழக்குப்பதிவு செய்து ஏ1 குற்றவாளி நாகேந்திரன், பொன்னை பாலு உள்பட 27 பேரை கைது செய்துள்ளனர். 2 பேர் வெளிநாட்டில் தலைமறைவாகி உள்ளதால், அவர்களை போலீசார் தேடி வருகின்றனர். இந்த வழக்கை விசாரித்த செம்பியம் போலீசார் வழக்கின் குற்றப்பத்திரிகையை சென்னை மாவட்ட முதன்மை செசன்சு கோர்ட்டில் தாக்கல் செய்தனர். தற்போது, இந்த வழக்கை மாவட்ட முதன்மை நீதிபதி கார்த்திகேயன் விசாரித்து வருகிறார். இதற்கிடையில் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றம் செய்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. அதன்படி வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது.

இந்த நிலையில், ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த 3 பேருக்கு ஜாமீன் வழங்கி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கைது செய்யப்பட்டு ஓராண்டுக்கும் மேலாக சிறையில் இருப்பதை சுட்டிகாட்டி சதீஷ், சிவா, ஹரிஹரன் ஆகிய 3 பேருக்கும் ஜாமீன் வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாதாக ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கின் ஏ1 குற்றவாளி நாகேந்திரன் உடல்நலக் குறைவால் கடந்த சில நாட்களுக்கும் முன் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மறைந்த ரவுடி நாகேந்திரனின் மகன் அஸ்வத்தாமனுக்கு வரும் 28ம் தேதி வரை இடைக்கால ஜாமீன் வழங்கி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதாகி சிறையில் உள்ள அஸ்வத்தாமனுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கப்பட்டது. நேற்று முன்தினத்துடன் ஜாமின் முடிந்த நிலையில் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இதையடுத்து தந்தையின் மரணத்தை தொடர்ந்த காரியங்களுக்காக 15 நாட்கள் ஜாமீன் வழங்க அவர் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முறையீடு செய்ய, வரும் 28ம் தேதி வரை ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது

# கர்நாடக முதல்வர் சித்தராமையா வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல்

**பெங்களூரு, அக். 15-**

கர்நாடக மாநில முதல்வர் சித்தராமையா மற்றும் துணை முதல்வர் டி.கே.சிவக்குமாரின் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பல்வேறு பகுதிகளுக்கு தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது. மத வழிபாட்டு தலங்கள், அரசியல் கட்சி தலைவர்கள், சினிமா பிரபலங்களின் வீடுகளுக்கு தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கர்நாடக மாநில முதல்வர் சித்தராமையா மற்றும் துணை முதல்வர் டி.கே.சிவக்குமாரின் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த 11ம் தேதி சென்னையில் உள்ள தமிழக டிஜிபி அலுவலகத்திற்கு இ-மெயில் மூலம் இந்த மிரட்டல் விடுக்கப்பட்டது. அந்த இ-மெயிலில் கர்நாடக முதல்வர், துணை முதல்வர் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இந்த மிரட்டல் தொடர்பாக தமிழக போலீசார், உடனடியாக கர்நாடக போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். இதையடுத்து, முதல்வர், துணை முதல்வர் வீடுகளில் போலீசார், வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் தீவிர சோதனை நடத்தினர். சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது தெரியவந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த கர்நாடக போலீசார் மிரட்டல் விடுத்த நபர் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# நேரடி வரி வருவாய் 6.33 சதவீதம் அதிகரிப்பு - மத்திய அரசு தகவல்

**டெல்லி, அக். 15-**

நேரடி வரி வருவாய் 6.33 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் முக்கிய வருவாய் பிரிவாக நேரடி வரி வருவாய் வசூல் பிரிவு உள்ளது. இந்நிலையில், நடப்பு நிதியாண்டில் நேரடி வரி வருவாய் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அதன்படி அக்டோபர் 12ம் தேதி வரையிலான காலகட்டத்தில் நேரடி வரி வசூல் வசூல் 6.33 சதவீதம் அதிகரித்து ரூ. 11.89 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், கடந்த ரூ. 4.91 லட்சம் கோடியாக இருந்த கார்ப்பரேட் நிறுவன வரிகள் நடப்பு ஆண்டு ரூ. 5.02 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. மேலும், தனிநபர்கள் உள்ளிட்ட பிற வரிகள் ரூ. 5.94 லட்சம் கோடியில் இருந்து 6.56 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



மத்திய, மாநில அரசுகள் மனிதர்கள் உட்கொள்ளும் உணவுகள், மருந்துகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களை தொடர் கண்காணிப்பில் வைத்திருக்க வேண்டும். இதில் அலட்சியம் காட்டும், முறைகேட்டில் ஈடுபடும் நிறுவனங்கள் மற்றும் அதை கண்காணிக்கும் துறை அலுவலர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை வேண்டும்.

- ராமதாஸ்



காசா தொடர்பான தீர்மானத்தை சட்டப்பேரவையில் கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஒரு சில கோரிக்கைகள் குறித்து தான் முதல்வரிடம் நேற்று பேசினோம். தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகள் குறித்து இனிவரும் நாட்களில் எங்கள் எம்.எல்.ஏ.க்கள் சட்டப்பேரவையில் குரல் கொடுப்பார்கள். தனியார் மயத்தை நாங்கள் முழுமையாக எதிர்க்கிறோம்.

- திருமாவளவன்



தனியார் டி.வி.யில் ஒளிபரப்பாகும் பிக் பாஸ் நிகழ்ச்சியை தடை செய்ய வேண்டும். இது தொடர்பாக சட்டசபையில் விவாதிக்க கவன ஈர்ப்பு தீர்மானம் அளித்து உள்ளேன். கர்நாடகா மற்றும் கேரளாவில் இந்த நிகழ்ச்சி மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது போன்று தமிழகத்திலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- வேல்முருகன்



முல்லைப் பெரியாறு அணையை இடித்து விட்டு, சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு எதிராக புதிய அணை கட்ட முயற்சிக்கும் கேரளா மாநில அரசு, கேரள பாதுகாப்பு பிரிகேட் போன்ற அமைப்புகள் மூலமாக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது. கேரள அரசின் இச்சதித்திட்டத்தை தமிழக அரசு முறியடிக்க வேண்டும்.

- வைகோ

## சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு திறன்மிகு தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரம்: மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்



**சென்னை,அக்.15**

மேயர் ஆர்.பிரியா சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தூய்மையான குடிநீர் வழங்கும் வகையில் முதற்கட்டமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் பயிலும் 16 சென்னை பள்ளிகளில் திறன்மிகு தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரத்தினை தொடங்கி வைக்கும் விதமாக அண்ணா நகர் மண்டலம்,செனாய் நகர் புல்லா அவென்யூவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட திறன்மிகு குடிநீர் தானியங்கி இயந்திரத்தின் பயன்பாட்டினை (14.10.2025) தொடங்கி வைத்தார். இதன் மூலம் இந்த பள்ளியில் பயிலும் 1373 மாணவர்கள் பயன்பெறுவர்.

சென்னை மாநகராட்சியின் கல்விக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக முதற்கட்டமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் கொளத்தூர், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, மடுவின்கரை, புதிய வண்ணாரப்பேட்டை, கே.கே.நகர் சென்னை மேல்நிலைப்பள்ளிகள், எம்.எச்.சாலை, மேற்கு சைதாப்பேட்டை, புல்லா அவென்யூ, புத்தா தெரு, மார்க்கெட் தெரு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள், செம்மஞ்சேரி மற்றும் எம்.ஜி.ஆர். நகர் சென்னை நடுநிலைப் பள்ளிகள், ஜோன்ஸ் தெரு சென்னை தொடக்கப்பள்ளி, சைதாப்பேட்டை சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 16 சென்னை பள்ளிகளில் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில்

16 எண்ணிக்கையிலான திறன்மிகு தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது புல்லா அவென்யூ, மார்க்கெட் தெரு மற்றும் சைதாப்பேட்டை ஆகிய 3 சென்னை பள்ளிகளில் தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி சென்னை பள்ளிகளில் ஏற்கனவே குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் நாளொன்றுக்கு 250 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது மாணவர்களின் தேவையின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு இந்த தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரம் பொருத்தப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக, 500 முதல் 1000 மாணவர்கள் பயிலும் 35 சென்னை பள்ளிகளில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் திறன்மிகு தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், ஆணையாளர்.ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (கல்வி) க.கற்பகம், மத்திய வட்டார துணை ஆணையாளர்எச்.ஆர். கௌஷிக்,நிலைக்குழுத் தலைவர்கள்நே.சிற்றரசு (பணிகள்) த.விசுவநாதன் (கல்வி), மண்டலக்குழுத் தலைவர்கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜன் மற்றும் கலந்து கொண்டனர்.



**வடசென்னை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் திருவிகநகர் மண்டலம் 74வது வார்டில் கட்டப்பட்டு வரும் சமுதாய கூடத்தினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் மேயர் ஆர்.பிரியா, ஆணையர் குமரகுருபரன், துணை ஆணையர் கவுசிக், மண்டல குழு தலைவர் சரிதா கலந்து கொண்டனர்.**

## சென்னை மணலி பகுதியில் திமுக பாகமுகவர்கள் கூட்டம்:மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் பங்கேற்பு



**திருவொற்றியூர், அக்.15**

திருவொற்றியூர் மத்திய பகுதி திமுக சார்பில், பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மணலியில் பகுதி செயலாளரும் மண்டல குழு தலைவரமான ஏ.வி.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. மாநில மீனவரணி துணைத்தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். மாவட்ட திமுக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., கலந்து கொண்டு கட்சியின் பல்வேறு பணிகள் கட்சி குறித்து ஆலோசனை வழங்கினார்.அப்போது அவர், தமிழகத்தை வஞ்சிக்கும் ஒன்றிய பாஜக அரசின் துரோகங்களையும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாட்டில் செயல்படுத்திய திட்டங்களால், அனைத்து துறைகளிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், பயன்கள் குறித்து எடுத்துரைத்து, வருகின்ற 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் மீண்டும் திமுக ஆட்சி அமைய கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் தீவிரமாக பணியாற்ற வேண்டும் என்றார்.இந்த கூட்டத்தில் அவைத்தலைவர் முத்துசாமி, முன்னாள் கவுன்சிலர் கரிகால்சோழன், வார்டு செயலாளர்கள் சாலை கணேசன், செல்வம். பகுதி பொருளாளர் நாகலிங்கம் கலந்து கொண்டனர்.

## பெரியமேடு பகுதியில் கஞ்சா சாக்லேட்டுகள் வைத்திருந்த வடமாநில வாலிபர் கைது

**சென்னை அக் 15-**

சென்னைபெரியமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், பெரியமேடு, பார்க் இரயில் நிலையம் அருகில் கண்காணித்து, அங்கு கஞ்சா சாக்லேட்டுகள் வைத்திருந்த எதிரி ஜிதேந்திர சர்மா, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 175 கிராம் எடை கொண்ட 35 கஞ்சா சாக்லெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி ஜிதேந்திர சர்மா மீது வழக்குப்பதிவு செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## பிரியாணி கடை உரிமையாளரை கத்திமுனையில் தாக்கி பணம் பறித்த 3 ரவுடிகள் கைது

**சென்னை அக் 15-**

சென்னை கே.கே.நகரில் பிரியாணி கடை உரிமையாளரை கத்திமுனையில் தாக்கி பணம் பறித்த 3 ரவுடிகளை போலீசார் கைது செய்தனர்.

சென்னை எம்.ஜி.ஆர்.நகர் புகழேந்தி தெருவை சேர்ந்தவர் பிரபு(35). இவர் கே.கே.நகர் இஎஸ்ஐ மருத்துவமனை அருகே பிரியாணி கடை நடத்தி வருகிறார். வழக்கம் போல் கடைக்கு தேவையான காய்கறிகளை வாங்க நேற்று முன் தினம் தனது பைக்கில் கோயம்பேடு நோக்கி சென்றார். அப்போது கே. கே.நகர் வன்னியர் தெரு அருகே செல்லும் போது, பைக்கில் வந்த 3 பேர், திடீரென பிரபுவை வழிமறித்து பணம் கேட்டு மிரட்டினர். அதற்கு அவர் தர மறுத்ததால் கத்தியை காட்டி அவரை சரமாரியாக தாக்கி ரூ.4,300 பணத்தை பறித்து கொண்டு தப்பி ஓடிவிட்டனர்.இதுகுறித்து பிரியாணி கடை உரிமையாளர் பிரபு கே.கே.நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் படி போலீசார் சிசிடிவி காட்சிகளை வைத்து விசாரணை நடத்திய போது, பிரபல ரவுடிகளான கே.கே.நகர் 63வது தெருவை சேர்ந்த அபிஷேக்(25), போரூர் மதனந்தபுரம் பகுதியை சேர்ந்த நரேன்(25), தேனாம்பேட்டை திரு.வி.க குடியிருப்பை சேர்ந்த பிரகாஷ்(43) ஆகியோர் என தெரியவந்தது. அபிஷேக் மீது 10 குற்ற வழக்குகள், நரேன் மீது 10 வழக்குகள், பிரகாஷ் மீது 14 குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பது தெரியவந்தது. அதைதொடர்ந்து, போலீசார் 3 ரவுடிகளையும் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து பணம் மற்றும் ஒரு கத்தி, ஒரு பைக் பறிமுதல் செய்யப்பட்டது.



சென்னை சைதாப்பேட்டை சட்டமன்ற அலுவலகத்தில் வருவாய் துறை சார்பில் சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வணிக கடன் வழங்கும் சிறப்பு முகாமினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார். இதில் மண்டல குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் கலந்துகொண்டனர்.



**காஞ்சிபுரம் மாநகராட்சி சாலைத் தெருவில் நடந்த 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமை மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேயர் மகாலட்சுமி, மாநகராட்சி ஆணையாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.**

## வேளச்சேரி நேரு நகரில் குளிரூட்டப்பட்ட மண்டபம்: பொதுமக்கள் பயன்படுத்தலாம்

### சென்னை மாவட்ட கலெக்டர் தகவல்

**சென்னை அக்15-**

பெசன்ட்நகர் கோட்டத்தில் திருமண மண்டபம் வாடகை விடுவதற்கு தயாராக உள்ளதால் இதனை பொதுமக்கள் பயன்படுத்தி பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே அறிவுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பெசன்ட்நகர் கோட்டத்திற்குட்பட்ட வேளச்சேரி, நேருநகர், காமராஜர் தெருவில் 650 இருக்கை வசதி கொண்ட குளிரூட்டபட்ட திருமண மண்டபம்,250 பேர் அமரக்கூடிய உணவு அரங்கம் கொண்ட சமையல் கூடம், குளிர்சாதன வசதியுடன் கூடிய மணமக்கள் அறை, 5 விருந்தினர் அறைகள், லிப்ட் வசதி, விசாலமான தங்கும் அறைகள், கார் பார்க்கிங் வசதி (26 வரை), பைக் பார்க்கிங் வசதி (40 வரை), கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் தீயணைப்பு சாதனங்கள் மற்றும் ஜெனரேட்டர் வசதியுடன் அமைந்துள்ளது. வாடகை விடுவதற்கு தயாராக உள்ளது. பொதுமக்கள் இதனை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




**திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக பாகஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பாக முகவர்கள் கலந்துரையாடல் கூட்டம் பகுதி செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ சிறப்புரையாற்றினார்.மாநில மாவட்ட பகுதி, வட்ட நிர்வாகிகள் வி.ராமநாதன் வழக்கறிஞர் சந்திரபோஸ் தி.நகர் மோகன் அரிமா எஸ்.டி. சங்கர் ஆர்.டி மதன் குமார் வட்டசெயலாளர் கே.பி.சொக்கலிங்கம் கலந்து கொண்டனர்.**



**திருவள்ளூரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பாக மழைநீர் சேமிப்பு தொடர்பான விழிப்புணர்வு பேரணியில் மாணவ மாணவியர்கள் கலந்துக்கொண்டனர். இதை மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் துவக்கி வைத்தார். உடன் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் வெ.அமலதீபன், உதவி நிர்வாகப் பொறியாளர் கோ.ஜெயசுதா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) ம.மோகனா உள்ளனர்.**

## தீபாவளியை முன்னிட்டு கோயம்பேடு மார்க்கெட் 21ம் தேதி செயல்படாது

**சென்னை அக் 15-**

கோயம்பேடு மார்க்கெட்டில் 1900க்கும் மேற்பட்ட காய்கறி கடைகள் செயல்பட்டு வருகின்றன. இங்கு காய்கறிகளை அனுப்பும் உழவர்களும், தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தில் பங்கேற்பார்கள் என்பதால், கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டிற்கு தீபாவளிக்கு அடுத்த நாளான 21ம் தேதி விடுமுறை அளிக்க வேண்டும், என்ற கோரிக்கை எழுந்தது. இந்நிலையில், கோயம்பேடு மார்க்கெட் ஒருங்கிணைந்த அனைத்து கூட்டமைப்பு தலைவர் ராஜசேகரன் தலைமையில் நேற்று நடந்த கூட்டத்தில், வியாபாரிகள் கலந்துகொண்டு தீபாவளிக்கு அடுத்த நாளான 21ம் தேதி, கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டிற்கு விடுமுறை விடுவதற்கு முடிவு எடுத்தனர்.இது தொடர்பாக கோயம்பேடு மார்க்கெட் ஒருங்கிணைந்த அனைத்து கூட்டமைப்பு தலைவர் ராஜசேகரன் கூறுகையில், 'விவசாயிகள் குடும்பத்தோடு தீபாவளி கொண்டாட்டத்தில் பங்கேற்பார்கள் என்பதால், அன்று காய்கறிகளை பறித்து அனுப்பும் பணிகள் நடைபெறாது. லாரி ஓட்டுநர்களும் தங்கள் குடும்பத்தோடு தீபாவளி கொண்டாட சொந்த ஊர்களுக்கு செல்ல உள்ளனர். அதன் காரணமாக தீபாவளிக்கு அடுத்த நாளான 21ம் தேதி காய்கறிகள் மார்க்கெட்டிற்கு காய்கறி வராது. அதனால் 21ம் தேதி கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டிற்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது,'' என்றார்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஒப்பனை, அழகுக்கலை மற்றும் பச்சை குத்துதல் பயிற்சி: தாட்கோ இயக்குனர் தகவல்

**சென்னை அக் 15-**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) தலை சிறந்த தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஒப்பனை, அழகுக்கலை மற்றும் பச்சை குத்துதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமிதெரிவித்துள்ளார்.

இது குறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது தாட்கோ, தலை சிறந்த தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு, ஒப்பனை, அழகுக்கலை மற்றும் பச்சை குத்துதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியினை பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்ந்தவராக இருக்க வேண்டும். இப்பயிற்சிக்கு எட்டாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்தவராக இருக்க வேண்டும். மற்றும் 18 முதல் 35 வயதிற்குள்ளும் குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சிக்கான கால அளவு 90 நாட்கள் மேலும் திருச்சி மாவட்டத்தில் தங்கி படிப்பதாற்கான செலவினத் தொகை தாட்கோவால் வழங்கப்படும்.

இப்பயிற்சி முடித்தவுடன் தகுதியான நபர்களை பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலமாக தேர்வு செய்து அந்நிறுவனத்தின் சார்பாக ஆரம்ப கால மாத ஊதியமாக ரூ.15,000/- முதல் ரூ.25,000/- வரை வருவாய் ஈட்ட வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். இப்பயிற்சியில் சேருவதற்கு தாட்கோ இணையதளம் (www.tahdco.com) என்ற முகவரியில் பதிவு செய்ய வேண்டும். என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.



**சென்னை ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி தண்டையார்பேட்டை சுனாமி அடுக்கு மாடி குடியிருப்பு பகுதியில் வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட அதிமுக செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ், மக்களைகாப்போம் தமிழகத்தை மீட்போம் எடப்பாடியாரின் எழுச்சி பயணத்தையொட்டி அ.தி.மு.க. ஆட்சியின் 10-ஆண்டு சாதனைகள் குறித்து துண்டு பிரசுரங்களை வழங்கினார் உடன் மாவட்ட பகுதி வட்ட மாநில நிர்வாகிகள் நேதாஜி கணேசன், ஏ.கணேசன், சந்தனசிவா வி.எஸ்.புருஷோத்தமன், எல்.எஸ். மகேஷ்குமார், நாகரத்தினம் ரவிராஜன் இருந்தனர்.**

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# உயர்கல்வி வழிகாட்டி திட்டத்தின் கீழ் அரசு பள்ளி மாணவர்களின் கல்லூரி களப்பயணம்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்தார்

ஊட்டி, அக்.15-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், பள்ளிகல்வித்துறை சார்பில், உயர்கல்வி வழிகாட்டி திட்டத்தின் கீழ் அரசு பள்ளி மாணவர்களின் கல்லூரி களப்பயணத்தினை (2025), மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேற்று (14.10.2025) கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயில்வதற்கான அவசியம், கல்லூரிகளில் உள்ள பாடத்திட்டங்கள் அதற்கான வாய்ப்புகள் போன்ற விளக்கங்கள் மாணவர்கள் பெறும் வகையில், முதலமைச்சர் மாணவ, மாணவியர்களை கல்லூரிகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச்செல்லும் திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள். அதனடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், உயர்கல்வி வழிகாட்டி திட்டத்தின் கீழ், 2025-2026 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் களுக்கு உயர்கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தும் விதமாக 12 ஆம் வகுப்பு பயிலும் 1344 மாணவ, மாணவியர்களை கல்வி சுற்றுலா அழைத்து செல்ல திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக உதகை, குன்னூர், கூடலூர், கோத்தகிரி பகுதியை சேர்ந்த 21 பள்ளிகளிலிருந்து சுமார் 186 மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்வி சுற்றுலா பயணம் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த கல்வி சுற்றுலா பயணமானது கேத்தி சி.எஸ்.ஐ பொறியியல் கல்லூரிக்கு அழைத்து செல்லப்பட்டு உயர்கல்வி வழிகாட்டு ஆலோசனைகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என கலெக்டர் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, உயர்கல்வி கற்பதற்கு வழிகாட்டியாகவும், தங்களுடைய எதிர்காலத்தை சிறப்பாக அமைத்து கொள்ள தேவையான வழிகாட்டுதலை பெறவும், இதுபோன்றதொரு சிறந்த திட்டத்தினை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சருக்கும், களப்பயணம் செல்ல தேவையான வசதிகளை செய்து கொடுத்த மாவட்ட கலெக்டருக்கும் மாணவ, மாணவிகள் நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். முன்னதாக, மாவட்ட கலெக்டர் கல்லூரி களப்பயணம் (கல்வி சுற்றுலா) 2025 செல்லும் மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி குழு புகைப்படம் எடுத்து கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் நந்தகுமார், உதவி திட்ட அலுவலர் அர்ஜூணன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




# குண்டடம் ஒன்றியம் ருத்ராவதி பேரூராட்சி பகுதிகளில் ரூ.6.8 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள்

## செய்தியாளர்களுடன் சென்று கலெக்டர் மனிஷ் நாரணவரே ஆய்வு

திருப்பூர்,அக்.15-

திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ருத்ராவதி பேரூராட்சி பகுதிகளில் ரூ.6.08 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகளை கலெக்டர் மனிஷ் நாரணவரே செய்தியாளர் பயனத்தின் போது பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் திருப்பூர் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டப்பணிகள் முழுமையாக பொதுமக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு ஆய்வுப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம் திருப்பூர் மாவட்டம், .குண்டடம் ஊராட்சி ஒன்றியம் எல்லப்பாளையம் புதூர் ஊராட்சியில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டபப்பட்டு வரும் 21 வீடுகளையும், எல்லப்பாளையம் புதூர் ஊராட்சி, பங்காம்பாளையத்தில் வளமிகு வட்டார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தினையும், சூரிய நல்லூர் ஊராட்சியல் முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.2.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டும் வீட்டினையும், தாயம்பாளையத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு 15-வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடத்தினையும், குண்டடம் கால்நடை மருந்தகத்தினை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, ருத்ராவதி பேரூராட்சி வார்டு எண் – 3-ல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன எரிவாயு தகன மேடை கட்டடத்தினையும், ருத்ராவதி பேரூராட்சி வார்டு எண் – 1- ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.80.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயக்கூடத்தினையும், முத்தனம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆய்வு மேற்கொண்டு மற்றும் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் உடல் வளர்ச்சி மற்றும் எடையை ஆய்வு மேற்கொண்டு சமந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டு விரைந்து பணிகளை முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

மேலும், குண்டடம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் 15-வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.78.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தினையும், கொழுமங்குழி ஊராட்சி, தம்புரெட்டிபாளையத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.17.25 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டடத்தினையும், சடையபாளையம் ஊராட்சி, ஈஸ்வர செட்டிபாளையத்தில் வளமிகு வட்டார வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.17.20 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டடத்தினையும், சடையபாளையம் ஊராட்சியில் முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.2.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டும் வீட்டினையும், பெல்லம்பட்டி ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் வளமிகு வட்டார வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு சமையல் அறை கட்டடத்தினையும், மருதூர் ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.89.72 இலட்சம் மதிப்பீட்டில் செங்காட்டுபாளையம் முதல் நொச்சிபாளையம் வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், பெரியகுமாரபாளையம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிறுத்தம் என மொத்தம் ரூ.6.08 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் பணிகளின் தற்போதைய நிலை குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. இவ்வாறு கலெக்டர் டாக்டர்.மனிஷ் நாரணவரே செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

ஆய்வின் போது, குண்டடம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நாகலிங்கம், ரமேஷ், உதவி பொறியாளர் செந்தில்குமார், மகேஷ்வரி, ருத்ராவதி பேரூராட்சி செயல் அலுவலர் .சதீஸ்குமார் மற்றும் செய்தியாளர்கள் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



ஈரோடு மாவட்டத்தில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமினை நேரில் பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் ச.கந்தசாமி வழங்கினார்

ஈரோடு,அக்.15-

ஈரோடு மாவட்டம், மாநகராட்சி மண்டலம்-3 சடையம்பாளையம் ரோடு, ரங்கம்பாளையம், எம்.ஜே.பி. மஹாலில் கலெக்டர் ச.கந்தசாமி இன்று (14.10.2025) நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமினை நேரில் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்கு உடனடி தீர்வு வழங்கும் வகையில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற சிறப்புத் திட்டத்தை தொடங்கி வைத்து, இச்சிறப்பு திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் முகாம்கள் நடத்தப்பட்டு பொது மக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு வருகிறது.

அதன்படி, இன்று கலெக்டர் ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 சடையம்பாளையம் ரோடு, ரங்கம்பாளையம், எம்.ஜே.பி. மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமினை நேரில் சென்று பார்வையிட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்.

இம்முகாமில் மனு அளித்த பயனாளிகளுக்கு உடனடி தீர்வாக பட்டா மாறுதல் ஆணை, குடும்ப அட்டையில் பெயர் நீக்கம், சாதிச் சான்றிதழ், மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்கான சான்றிதழ்கள், வீட்டுவரி ரசீது சான்றிதழ் 12 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும், நாளைய தினம் (15.10.2025) உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமானது, பவானிசாகர் வட்டாரம், நல்லகள்ளிபாளையம், பத்மாவதி மஹாலிலும், கோபிசெட்டிபாளையம் வட்டாரம், சிறுவலூார் டி.எஸ், மஹாலிலும், மொடக்குறிச்சி வட்டாரம், பி.கே.வேலம்பாளையம் சபா மண்டபத்திலும் பவானி வட்டாரம், பெரியபுலியூர் மகளிர் சுய உதவிக்குழு கட்டிடத்திலும், குமாரவலசு (நகர்ப்புற பஞ்சாயத்து) வி.மேட்டுப்பாளையம் சதா மஹால் என 5 இடங்களில் நடைபெற உள்ளது. இம்முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கி பயன்பெறலாம். இம்முகாமில் 3- மண்டல குழுத்தலைவர் சசிக்குமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# ஈரோடு மாவட்ட சிறுதொழில்கள் சங்கத்தின் 4வது செயற்குழு கூட்டம்

ஈரோடு அக் 15-

ஈரோடு மாவட்ட சிறுதொழில்கள் சங்கத்தின் (ஈடிசியா) 4வது செயற்குழு கூட்டம் ஈடிசியா தலைவர் கந்தசாமி; தலைமையில் ஈடிசியா நடைபெற்றது.

ஈரோடு மாவட்ட சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்காக செயல்பட்டுவரும் ஈடிசியா தொழில்நிறுவனங்கள் வர்த்தக நிறுவனங்களின் தற்போதைய முக்கியத் தேவையான GST வரிவிதிப்பு குறைத்த கேள்விகள் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு குறித்து உறுப்பினர்கள் அதிகமாக அறிந்துகொள்ள வேண்டி சிறப்பு ஏற்பாடு செய்திருந்தது.

அதன்படி எம் எ பி என், நிறுவனத்தின் பங்குதாரரும் ஆடிட்டருமான எம்..அசோக் சிறப்பு விருந்தினராக இக்கூட்டத்திற்கு வந்திருந்து ஜிஎஸ்டி வரிவிதிப்பு மற்றும் தற்போதைய வரி மாற்றங்கள் அதனால் தொழில் நிறுவனங்கள் பெறும் நன்மைகளை எடுத்துக் கூறினார். சங்க உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். .முன்னதாக கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் தலைவர் கந்தசாமி வரவேற்றார். ஈடிசியாவின் நடவடிக்கைகளை செயலாளர் ஏ..சரவணபாபு தொகுத்து அளித்தார். பொருளாளர் எம் கே கே.பரத் ஈடிசியாவின் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தார். இக்கூட்டத்தில் ஈடிசியாவின் முன்னாள் தலைவர்கள் நிர்வாகக்குழு செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.




தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# நல வாரியத்தில் பதிவு செய்த அனைவருக்கும் தீபாவளி சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.5000 வழங்க வேண்டும்

## முதலமைச்சருக்கு கட்டுமான அமைப்பு சாரா தொழிற்சங்க மாவட்ட தலைவர் கார்த்திக் மனு

ஊட்டி, அக்.15-

நல வாரியத்தில் பதிவு செய்த அனைவருக்கும் தீபாவளி சிறப்பு ஊக்கத் தொகையாக ரூபாய் 5,000 வழங்க வேண்டும் கட்டுமான அமைப்பு சாரா தொழிற்சங்க மாவட்ட தலைவர் கார்த்திக் நீலகிரி கலெக்டர் மூலமாக முதலமைச்சருக்கு அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது-

நமது மாநிலத்தில் சுமார் 80 விழுக்காடு கட்டுமான அமைப்பு, சாரா தொழிலாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் அவல நிலையை போக்கிட கீழ்கண்ட கோரிக்கைகளை பரிசீலித்து எங்கள் வாழ்வின் நிலையை உயர்த்த அய்யா எங்கள் மீது கருணை கொண்டு கீழ்வரும் கோரிக்கைகளை பரிசீலித்து வழங்கிட வேண்டுமென மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம். கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து 60 வயது பூர்த்தி அடைந்த தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கி வரும் ஓய்வூதியம் ரூபாய் 1200 இல் இருந்து ரூபாய் 5000 ஆக உயர்த்தி வழங்கிட வேண்டும்இ 60 வயது பூர்த்தி அடைந்து ஓய்வூதியும் பெரும் கட்டுமான தொழிலாளர்கள் இயற்கை மரணம் நேரிட்டால் வாரியத்தின் மூலம் இயற்கை மரண நிதி வழங் கப் ப டு வ தில் லை, ஓய்வு ஊதியம் பெறும் தொழிலாளர் எந்த வயதில் இறந்தாலும் இயற்கை மரண நிதி வழங்க வேண்டும். நல வாரியத்தில் பதிவு செய்த அனைவருக்கும் தீபாவளி சிறப்பு ஊக்கத் தொகையாக ரூபாய் 5000 வழங்கிட வேண்டும். பதிவு செய்த தொழிற்சங்கங்களுக்கு தனியான கடவுச்சொல் வழங்கிட வேண்டும். கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு கட்டுமான பொருட்களின் மீது வசூலிக்கப்படும் வரியில் இருந்து ஒரு வீதமாக லேவியாக வசூல் செய்து இந்த வாரியத்திற்கு சேர்க்கப்படுகிறது.

அதேபோல் அரசு வசூலிக்கும் ஜிஎஸ்டி வரியிலிருந்து அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஒரு சதவீதம் லேவியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும். சார்பாக வேண்டி விரும்பி கேட்டுக் கொள்ளப்படுகிறது... கட்டுமானத்திற்கு தேவையானபொருட்கள்மணல், ஜல்லி, கம்பி உள்ளிட்ட பொருட்களின்விலைவிண்ணைதொடும் அளவிற்கு உள்ளது. எனவே அரசு தலையிட்டுவிலை உயர்வினை கட்டுப்படுத்த கோரி வேண்டி விரும்பி கேட்டுக் கொள்ளப்படுகிறது போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை கொடுத்துள்ளனர்.



Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



முதலமைச்சர் கோப்பை விருதுக்கான கிரிக்கெட் போட்டி சென்னை யூனியன் ஸ்டேடியத்தில் நடைபெற்றது. ஈரோடு மாவட்ட அணி சார்பாக வேளாளர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவியர் பா.வேதிகா மற்றும் பி.ஆர்.ஹேமிலா கலந்து கொண்டு விளையாடி கோப்பை விருதினையும் ரொக்கப்பரிசையும் பெற்றனர்.வெற்றி பெற்ற வீராங்கனைகளை பள்ளியின் தாளாளர் எஸ்.டி.சந்திரசேகர், முதல்வர் வெ.லதா, நிர்வாக அலுவலர் எல்.சென்னியப்பன் பாராட்டி கௌரவித்தனர்.

# ஹாக்கி போட்டியில் ஈரோடு கொங்கு கல்வி நிலைய மாணவர்கள் சாதனை



ஈரோடு.அக்.15-

ஈரோடு மாவட்ட அளவில் நடைபெற்ற ஹாக்கி போட்டியில் ஈரோடு, ரங்கம்பாளையம் கொங்கு கல்வி நிலையம் மாணவர்கள் வயதிற்குட்பட்டோர் பிரிவில் ஹாக்கி விளையாட்டு போட்டியில் முதலிடம் பிடித்து மாநில அளவில் நடைபெறும் போட்டிக்கு தகுதி பெற்றனர்.

தாளாளர் சாதனை படைத்த மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியரையும் பாராட்டி பள்ளியின் தலைவர் எம்.சின்னச்சாமி, கே.செல்வராஜ், பொருளாளர் ஆர்.குணசேகரன், மற்றும் உதவித்தலைவர்கள் எஸ்.கே.சோமசுந்தரம், ஆர்.எம்.தெய்வசிகாமணி, இணைச் செயலாளர் டி.மீனாட்சிசுந்தரம், இணைப் பொருளாளர் வி.நாகராஜன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், முதல்வர் டி.நதியா அரவிந்தன் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months thereafter, I, ABDUL HAMEED A, S/O ABDUL SHAHITH Aged 24 years, permanently residing at No 6, Gowri Nagar, Ponniammanmedu, Chennai - 600110 Intend having my Enrollment as an Advocate moved before the Bar council of Tamilnadu and Puducherry, Bar council Buildings High court campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar council within 10 days.

ABDUL HAMEED A

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months thereafter,I, Raja T, S/o, Thangaraj C , Aged 48 years, Permanently residing at, 575/892, P H Road, Arumbakkam, Chennai - 600106, Intend having my Enrollment as an advocate moved before the Bar council of Tamilnadu, Bar council Buildings High court campus,Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar council within 10 days.

RAJA T

IN THE HON'LE X SMALL CAUSES COURT
AT CHENNAI
RLTOP No. 377 / 2025

Mr. D. ShanthilalJain
S/o. Mr. Deepchand
No. 82/2, P.K. Koil Street,
Royapuram, Chennai 600 013
Rep. by its Power agent
Mr. S. Rajesh, S/o. D. Shanthilal Jain
No. 82/2, P.K. Koil Street,
Royapuram, Chennai 600 013.
... Petitioner
// Vs //
Mr. S. Mayilai Antony
Flat No. G-1, Ground Floor,
Door No. 98/1, P.V. Koil Street,
Royapuram, Chennai – 600 013.
.. Respondent
To
Mr. S. Mayilai Antony
Flat No. G-1, Ground Floor,
Door No. 98/1, P.V. Koil Street,
Royapuram, Chennai – 600 013.
Sir,
Mr. Shanthilal Jain has filed a RLTOP case before the Hon'ble Small Causes Court - X, Chennai in RLTOP No. 377 / 2025 against you and you are the sole respondent in that case which came up for hearing on 13-10-2025. The Hon'ble court was pleased to order notice to you by way of substituted service and posted the matter on 22-10-2025. Hence kindly take notice and appear before the Hon'ble Small Causes Court – X, Chennai on the next date of hearing failing which the matter may be decided in your absence.

M. Mohana Sundaram
L. Chandra Sekaran
K. Ram Prasad
(Advocates for petitioner)

BEFORE THE HON'BLE XXV CITY CIVIL COURT, ALLIKULAM
E.P.NO.1657 OF 2024
IN
ARBITRATION CASE NO.ARB/RK/PL/07 OF 2012

Ramesh Kumar,
No.2/22, Kennet Lane,
Egmore, Chennai-600008.
...Decree Holder
-Vs
To
Jamir Banu,
W/o.Mohamed Yaseen,
No.18B, New No.21,
Perambur High Road,
Shanthi Nagar,
Chennai-600011.
...Judgement Debtor

Take notice that the above Execution Petition came up on 19.09.2025 before the Hon'ble XXV CITY CIVIL COURT, ALLIKULAM, CHENNAI for hearing and the Hon'ble Court was pleased to order notice to you returnable by 25.10.2025. Ensure your presence before the said court on 25.10.2025 at 10.30 a.m. either in person or through pleader without fail, failing which the petition will be decided in your absence.

G.PRABHAKAR
Counsel for Decree Holder

மாண்புமிகு மாவட்ட முதன்மை
நீதிமன்றம் திருவள்ளூர்
H.M.G.O.P. No. 355 of 2025

மைனர்: B. தனவ், வயது : 12
S. புவனேஷ்
த/பெ. லேட் D. சங்கர் பாபு
காவியம் தெரு, சிவம் நகர்,
ராஜாஜிபுரம், பெரியகுப்பம்
கிராமம், திருவள்ளூர் தாலுக்கா & மாவட்டம்.
.... மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் மேற்படி கோர்ட்டில் மைனர் B. தனவ், வயது 12 மைனரின் சொத்தான திருவள்ளூர் மாவட்டம், மேலண்டைப்பாக்கம் கிராமம், காந்தி ரோடு, பிளாட் நம்பர்: 3, கதவு: 5, தீபாதீ அம்மன் கோயில் தெரு, திருத்தணி விஸ்தீரணம் 1000 சதுரடி மைனருக்குண்டான பங்கினை மைனருக்காக விற்க வேண்டி அனுமதி வேண்டி மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளேன். இம்மனுவானது வருகிற 18.11.2025 அன்று ஆட்சபனைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சபனை இருந்தால் மேற்படி கோர்ட்டில் மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு ஆஜராகி ஆட்சபனை தெரிவிக்கலாம்.

D.S. ரமேஷ்
மனுதாரரின் வழக்கறிஞர்

## மே.இ.தீவுகள் அணியை வீழ்த்தி
# டெஸ்ட் தொடரை வென்றது இந்தியா




புதுடெல்லி, அக். 15-

மே.இ.தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி வென்றுள்ளது.

**அருண்ஜெட்லி...**

இந்தியாவுக்கு வந்துள்ள வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இரு அணிகளுக்குமான முதல் போட்டியில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 140 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இந்த நிலையில் இந்தியா-வெஸ்ட் இண்டீஸ் இடையிலான 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி டெல்லியில் உள்ள அருண்ஜெட்லி ஸ்டேடியத்தில் நடைபெற்று வருகிறது.

**248 ரன்களில் அவுட்...**

இந்த போட்டிக்கான டாசில் வென்ற இந்தியா முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து முதலில் பேட்டிங் செய்த இந்தியா தனது முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 518 ரன்கள் எடுத்திருந்த போது டிக்ளேர் செய்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஜெய்ஸ்வால் 175 ரன்னும், சுப்மன் கில் 129 ரன்னும் எடுத்தனர். தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய வெஸ்ட் இண்டீஸ் தனது முதல் இன்னிங்சில் 81.5 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 248 ரன்களில் ஆல் அவுட் ஆனது.

**பாலோ ஆனது...**

வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அதிகபட்சமாக அலிக் அத்தானஸ் 41 ரன் எடுத்தார். இந்தியா தரப்பில் குல்தீப் யாதவ் 5 விக்கெட்டும், ஜடேஜா 3 விக்கெட்டும் வீழ்த்தினர். இதன் மூலம் இந்தியா 270 ரன்கள் முன்னிலை பெற்றது. தொடர்ந்து வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு பாலோ ஆன் கொடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து வெஸ்ட் இண்டீஸ் அணி 2வது இன்னிங்சில் விளையாடியது. இறுதியில் 3வது நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு வெஸ்ட் இண்டீஸ் அணி 173 ரன்கள் எடுத்திருந்தது . ஜான் காம்ப்பெல் 87 ரன்களும், ஷாய் ஹோப் 66 ரன்களும் எடுத்து களத்தில் இருந்தனர்.

**390 ரன்களுக்கு அவுட்...**

இந்நிலையில், 4வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் தொடர்ந்து பேட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி தனது 2வது இன்னிங்சில் 390 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் வெஸ்ட் இண்டீஸ் 120 ரன்கள் முன்னிலை பெற்றது. வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அதிகபட்சமாக ஜான் கேம்ப்பெல் 115 ரன், ஷாய் ஹோப் 103 ரன் எடுத்தனர். இந்தியா தரப்பில் குல்தீப் யாதவ், பும்ரா தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

**எளிய இலக்குடன்...**

இதையடுத்து 121 ரன் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் இந்தியா தனது 2வது இன்னிங்சை தொடங்கியது. இந்தியாவின் தொடக்க வீரர்களாக ராகுல் மற்றும் ஜெய்ஸ்வால் களம் கண்டனர். இதில் ஜெய்ஸ்வால் 8 ரன்களில் அவுட் ஆனார். தொடர்ந்து சாய் சுதர்சன் களம் கண்டார். சுதர்சன் - ராகுல் இணை நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தது. இறுதியில் 4ம் நாள் முடிவில் இந்தியா 1 விக்கெட்டை இழந்து 63 ரன்கள் எடுத்தது. இந்தியா தரப்பில் ராகுல் 25 ரன்னுடனும், சுதர்சன் 30 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். இந்தியாவின் வெற்றிக்கு இன்னும் 58 ரன்கள் தேவைப்பட்டது.

**தொடரை வென்றது...**

இந்நிலையில் நேற்று நடைபெற்ற 5ம் நாள் ஆட்டத்தில் கே.எல்.ராகுல், சாய் சுதர்சன் தொடர்ந்து சிறப்பாக விளையாடி ரன்கள் குவித்தனர். சாய் சுதர்சன் 39 ரன்களில் ஆட்டமிழந்தார் . பின்னர் கில் 13 ரன்களில் ஆட்டமிழந்தார் .

தொடர்ந்து துருவ் ஜுரேல் களமிறங்கினார். மறுபுறம் கே.எல்.ராகுல் அரைசதமடித்து அசத்தினார். இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 124ரன்கள் எடுத்து இந்திய அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றியால் டெஸ்ட் தொடரை 2-0 என இந்திய அணி முழுமையாக கைப்பற்றியது.

# வடகிழக்கு பருவமழை 2 நாட்களில் தொடக்கம்
## வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, அக். 15-

நடப்பு ஆண்டிற்கான வடகிழக்கு பருவமழை அடுத்த 48 மணிநேரத்தில் தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்திற்கு அதிகபடியான மழையை தரக்கூடிய பருவமழையாக வடகிழக்கு பருவமழை உள்ளது. வழக்கமாக வடகிழக்கு பருவமழை அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய 3 மாதங்களுக்கு பெய்யக்கூடும். இந்நிலையில் இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிவிப்பில், நடப்பு ஆண்டுக்கான வடகிழக்கு பருவமழை அடுத்த 48 மணிநேரத்தில் (2 நாட்களில்) தொடங்கும் என தெரிவித்திருந்தது.

முன்னதாக வடகிழக்கு பருவமழை வரும் 16 அல்லது 18ம் தேதிவாக்கில் தொடங்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. அதேவேளை, 2 நாட்களில் வடகிழக்கு பருவமழை தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தற்போது தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை வங்கக்கடலின் மத்திய மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் தொடங்கும். 2 நாட்களில் தொடங்கும் வடகிழக்கு பருவமழை நாட்களில் செல்ல செல்ல தீவிரமடையும். தென்தமிழகத்தில் கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி போன்ற பகுதிகளில் பருவமழை இயல்பை விட குறைவாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம்,, வேலூர் போன்ற பகுதிகளில் வடகிழக்கு பருவமழை இயல்பை விட அதிகமாக இருக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# 16 நாட்களுக்கு பிறகு வெளியே வந்த ஆனந்த் விஜய்யுடன் ஆலோசனை

சென்னை, அக். 15-

16 நாட்களுக்கு பிறகு வெளியே வந்த புஸ்ஸி ஆனந்த் நேற்று விஜய்யுடன் ஆலோசனை நடத்தினார்.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த மாதம் 27-ந் தேதி நடைபெற்ற தமிழக வெற்றிக்கழக பிரசார கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், துணை பொதுச் செயலாளர் நிர்மல் குமார், கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன் உள்பட சிலர் மீது போலீசார் வழக்குபதிவு செய்தனர்.

கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன், கரூர் மத்திய மாநகர நிர்வாகி பவுன் ராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்ட நிலையில், தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் மற்றும் இணை பொதுச் செயலாளர் சி. டி. ஆர். நிர்மல் குமார் ஆகியோர் தலைமறைவாகினர். இவர்களை கைது கைது செய்ய 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டன.

இந்த நிலையில் கரூர் கூட்ட நெரிசல் வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. இதனை தொடர்ந்து தலைமறைவாக இருந்த புஸ்சி ஆனந்த், நிர்மல்குமார் வெளியே வந்தனர். வெளியே வந்த உடன் முதலில் நிர்மகுமார் விஜய்யை சந்தித்தார். தொடர்ந்து புஸ்ஸி ஆனந்த் விஜய்யை சந்தித்தார். புஸ்ஸி ஆனந்த் விஜய்யுடன் சுமார் 20 நிமிடங்கள் ஆலோசனை நடத்தினர் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு மற்றும் கட்சியின் அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் குறித்து விஜய்யும், புஸ்ஸி ஆனந்தும் தீவிரமாக ஆலோசனை மேற்கொண்டனர் இந்த சந்திப்பை முடித்து கொண்டு புஸ்ஸி ஆனந்த் கிழக்கு கடற்கரை சாலை வழியாக புதுச்சேரிக்கு புறப்பட்டு சென்றார்.

# தமிழகத்தின் 12 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, அக். 15-

தமிழகத்தில் இன்று கோயம்புத்தூர், நீலகிரி, திண்டுக்கல், தேனி, மதுரை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:- தென்மேற்கு வங்கக் கடல் பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இது, மேற்கு-வடமேற்கு திசையில் குமரிக்கடல் பகுதிகளை நோக்கி நகரக்கூடும். இதன் காரணமாக, வரும் 19-ம் தேதி வாக்கில், தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளில் கேரள - கர்நாடக பகுதிகளுக்கு அப்பால் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும்.

இதன் காரணமாக இன்று (15-10-2025) தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, திண்டுக்கல், தேனி, விருதுநகர் மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

நாளை (16-10-2025) தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, திண்டுக்கல், தேனி, தென்காசி, மதுரை, சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை. கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மாநில திட்டக் குழுவின் 4 அறிக்கைகள் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் சமர்ப்பிப்பு

சென்னை, அக். 15-

மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 4 அறிக்கைகள் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேற்று (14.10.2025) மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளான "கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தின் தாக்க மதிப்பீடு", "நான் முதல்வன் திட்டத்தின் மதிப்பீட்டாய்வு", "தமிழ் நாட்டில் புத்தொழில் துவக்கத்திற்கான சுற்றுச்சூழல் அமைப்பு: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்", "தமிழ்நாடு கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுவசதிக் கொள்கை மற்றும் "தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகரிய மேம்பாட்டுக் கொள்கை" ஆகியவற்றை துணை முதல்வரும், மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் மற்றும் மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன் ஆகியோர் சமர்ப்பித்தனர்.

மாநில திட்ட குழுவானது முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் செயல்படும் ஓர் உயர்மட்ட ஆலோசனைக் குழுவாகும். தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடி மக்கள் நலத் திட்டங்களை மதிப்பீட்டு ஆய்வு செய்தல் மற்றும் அரசு ஆளுகையில் எழும் புதிய தேவைகளுக்கேற்ப கொள்கை முடிவுகளை எடுப்பதிலும், பல்வேறு ஆய்வுகள் நடத்தி அறிக்கை தயாரிப்பதிலும் தனது பங்களிப்பை மாநில திட்ட குழு நல்கி வருகிறது.

சமர்பித்த அறிக்கைகளின் முக்கிய அம்சங்களாவன:-

1. கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தின் தாக்க மதிப்பீடு:-

தமிழ்நாடு மாநில திட்டக் குழு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் தாக்க மதிப்பீட்டு ஆய்வினை மேற்கொண்டது. பயனாளிகள் மற்றும் அவர்களின் குடும்ப வாழ்வில் இத்திட்டம் ஏற்படுத்திய தாக்கத்தை கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும். கிராம மற்றும் நகர்ப்புறத்தில் வாழும் 10,311-க்கும் மேற்பட்ட குடும்பங்களை ஆய்வு செய்ததில், இத்திட்டத்தின் செயல்பாடு, சமூகத்தில் மிகவும் பின்தங்கிய பிரிவினரை சென்றடைந்துள்ளதை இவ்வாய்வானது கண்டறிந்துள்ளது.

கலைஞர் மகளிர் உரிமை திட்டம் பெண்களின் மேம்பாட்டிற்கான காரணியாக செயல்பட்டு, அவர்களின் தன்னம்பிக்கையை உயர்த்தி, குடும்பத்தில் பெண்களின் மதிப்பை வலுப்படுத்துகிறது. இத்திட்டத்தின் மூலம் பெறும் தொகையை பெண்கள், தாமாகவே முடிவெடுத்து தங்களது குடும்ப செலவுகளுக்காக பயன்படுத்துகின்றனர். பயனாளிகளில் கணிசமானோர், அவர்தம் குடும்பங்களின் பொருளாதார முடிவுகளில் தங்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

2. நான் முதல்வன் திட்டத்தின் மதிப்பீட்டாய்வு:

நான் முதல்வன் திட்டமானது தமிழ்நாடு அரசின், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு முன்னோடி திட்டமாகும். மாணவர்களுக்கு தொழில் சார்ந்த திறன்களை கற்பித்து வேலைவாய்ப்பு பெற்றிடவும், கல்வி கற்றல் மற்றும் தொழில் துறைகளின் தேவைகளுக்கிடையேவுள்ள இடைவெளியை குறைப்பதையும் நோக்கங்களாகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

மாநில திட்டக் குழுவால், "நான் முதல்வன்" திட்டம் செயல்படுத்தப்படும் பொறியியல் மற்றும் பல வகை தொழில் நுட்ப கல்லூரிகளில் பயிலும் மாணவர்களிடம் இத்திட்டத்தின் மதிப்பீட்டாய்வு டிசம்பர் 2024 முதல் மே 2025 வரை மேற்கொள்ளப்பட்டது. 52 பொறியியல் கல்லூரிகள் மற்றும் 72 பாலிடெக்னிக் கல்லூரிகளில் சுமார் 9000 மாணவ மாணவிகளிடம் இத்திட்டம் குறித்து கேட்டறியப்பட்டது. தொழில் நிறுவனங்களின் தேவைகள் மற்றும் வேலை வாய்ப்பிற்கான தொழில் நுட்ப திறன்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விரிவாக மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட ஆய்வில், 75 சதவிகிதத்திற்கும் அதிகமான மாணவர்கள் வேலைவாய்ப்புக்கு தேவையான நடைமுறை, சுய விவரங்கள் தயாரிப்பு மற்றும் தொழில் சார்ந்த திறன்களை பெற்றுள்ளதால், தொழில் நிறுவனங்களின் வேலைவாய்ப்பு தேர்வுகளை, நம்பிக்கையுடன் எதிர்கொள்ள தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளனர். கிராமப்புற மற்றும் முதல் தலைமுறை மாணவ, மாணவியர்களுக்கு அளிக்கப்பட்ட சமமான தொழில் சார்ந்த திறன் பயிற்சிகளால் வேலைவாய்ப்பு திறன் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. தமிழ்நாட்டில் புத்தொழில் துவக்கத்திற்கான - சுற்றுச்சூழல் அமைப்பு: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்:

தமிழ்நாடு 2030-ம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் அடித்தளமாக புத்தொழில்களின் வளர்ச்சிக்கான சுற்றுச்சூழல் அமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. நமது மாநிலம் தேசிய அளவில் புத்தொழில் வளர்ச்சியில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

மேலும், புத்தொழிலின் வளர்ச்சிக்கென விரிவான புதுமை கொள்கைகளுடன் 12 முக்கிய துறை வாரியான கொள்கைகளின் வாயிலாக, செயற்கை நுண்ணறிவு, மின் வாகன உற்பத்தி மற்றும் உயரிய தொழில்நுட்பவியல், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் போன்ற துறைகளில் புத்தொழில் துவக்கத்திற்கான முக்கிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், உள்கட்டமைப்பு, மனித மூலதனம், புதிய தொழில் முனைவோர்களை உருவாக்குதல் மற்றும் அரசு-கல்வி கூட்டாண்மைகள் மூலம் வழிகாட்டுதல் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் நிலவும் துறை சார்ந்த திறன்களின் அடிப்படையில் புத்தொழிலுக்கான யுக்திகளை வகுத்தல் மாநிலத்தின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

4, தமிழ்நாடு கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டு வசதிக் கொள்கை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகரிய மேம்பாட்டுக் கொள்கை:

தமிழ்நாடு கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுவசதிக் கொள்கையானது மாநிலத்தின் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் நீடித்த அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மற்றும் மலிவு விலையில் பெறத்தக்க வீட்டு வசதிக்கான அவசரத் தேவையைச் சுட்டிக்காட்டுகிறது. மேலும், பெருகி வரும் குடியிருப்புத் தேவைகளை நிறைவுச் செய்ய சமமான நில விநியோகம், நிதியுதவி மற்றும் தனியார்த்துறைகளின் ஒத்துழைப்பு ஆகியவற்றின் இன்றியமையாமையை இக்கொள்கை கோடிட்டுக் காட்டுகிறது.

இக்கொள்கை, சமூக சமத்துவம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றினை நோக்கமாக கொண்டு எளிதில் பெறத்தக்க மற்றும் தரமான வீட்டுவசதியை முன்வைக்கிறது. மேலும், அனைத்து வருமான பிரிவினரும் பெறத்தக்க வீட்டுவசதியை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இக்கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கொள்கை, நீடித்த நிலையான கிராம நகர்ப்புற இணைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் விளிம்பு நிலை சமூகங்களுக்கென தனிப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதற்கான முயற்சிகளுக்கும் வழிகாட்டுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஐ.பி.எஸ். அதிகாரிக்கு எதிராக
# தோனி தொடர்ந்த வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு: ஐகோர்ட்

சென்னை, அக். 15-

தனக்கு எதிராக 100 கோடி ரூபாய் மான நஷ்டஈடு கேட்டு கிரிக்கெட் வீரர் தோனி தொடர்ந்த வழக்கை, நிராகரிக்க கோரி முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி சம்பத்குமார் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீதான தீர்ப்பை, சென்னை உயர் நீதிமன்றம் தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்துள்ளது.

**ஐபிஎல் சூதாட்டம்...**

ஐபிஎல் சூதாட்டம் குறித்து விசாரணை நடத்திய முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி சம்பத்குமார், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் தோனி சூதாட்டத்தில் ஈடுபட்டதாக தனியார் தொலைக்காட்சி விவாத நிகழ்வில் (ஜீ தொலைக்காட்சி) குறிப்பிட்டிருந்தார். இதன் மூலம்



தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாகக் கூறி, 100 கோடி ரூபாய் மான நஷ்டஈடு கேட்டு ஐ.பி.எஸ். அதிகாரி சம்பத்குமார், தனியார் தொலைக்காட்சிக்கு எதிராக, கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனி, 2014ம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

**தேதி குறிப்பிடாமல்...**

தோனியின் வழக்கை நிராகரிக்க கோரி முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி சம்பத்குமார் தாக்கல் செய்த மனுவை விசாரித்த தனி நீதிபதி சாட்சி விசாரணை தொடங்கியுள்ள நிலையில், இந்த மனுவை ஏற்றுக்கொண்டால் பிரதான வழக்கு முடிவுக்கு வர இன்னும் பல ஆண்டுகள் ஆகும் என கூறி, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து சம்பத்குமார் தாக்கல் செய்த மேல்முறையீடு வழக்கை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம் மற்றும் ஜோதி ராமன் அமர்வு, வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்தது.

# ராணாவுக்கு கம்பீர் ஆதரவு

சமீபத்தில் ஆசிய கோப்பை 2025 தொடரில் மோசமான பந்து வீச்சை வெளிப்படுத்திய போதிலும் (54 ரன்கள் கொடுத்து விக்கெட்டுகள் இல்லை) அவர் இரண்டு அணியிலும் ஹர்ஷித் ராணா தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்தத் தேர்வு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் வேண்டுமென்றால் என்னை விமர்சியுங்கள் என்றும் அந்தக் குழந்தையை விட்டுவிடுங்கள் என்றும் ஹர்ஷித் ராணாவின் கூறியுள்ளார். உங்கள் யூடியூப் சேனலில் கூடுதல் பார்வை வேண்டும் என்பதற்காக கண்டதை பேசாதீர்கள். வேண்டுமென்றால் என்னை விமர்சியுங்கள். நான் அதைத் தாங்கிக் கொள்வேன். அந்தக் குழந்தையை விட்டுவிடுங்கள்.

இது கொஞ்சம் வெட்கக்கேடான விஷயம்தான். நான் உங்ககிட்ட ரொம்ப நேர்மையா சொல்றேன். உங்க யூடியூப் சேனலுக்காக ஒரு 23 வயது பையனை குறிவைக்கிறீங்கன்னு சொல்றது ரொம்ப நியாயம் இல்ல. ஏன்னா, அவங்க அப்பா முன்னாள் தலைவரோ, முன்னாள் கிரிக்கெட் வீரரோ, வெளிநாட்டுல பிறந்த இந்தியரோ இல்ல. இதுவரைக்கும் அவர் எந்த கிரிக்கெட் விளையாடியிருந்தாலும், அவரு தனியா விளையாடியிருக்காரு, தொடர்ந்து தனியா விளையாடுவாங்க. நீங்க யாரையாவது தனியா குறிவைச்சீங்கன்னா, அது நியாயமில்லை. என கம்பீர் கூறினார்.

## இந்திய வீராங்கனை 'சாம்பியன்'

ஜப்பான் ஓபன் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி அங்குள்ள யோகோஹமாவில் நடந்தது. இதில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் உலக தரவரிசையில் 117-வது இடத்தில் இருக்கும் இந்திய வீராங்கனை ஜோஸ்னா சின்னப்பா, தரவரிசையில் 53-வது இடத்தில் உள்ள ஹயா அலியை (எகிப்து) சந்தித்தார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஜோஸ்னா 11-5, 11-9, 6-11, 11-8 என்ற செட் கணக்கில் ஹயா அலியை தோற்கடித்து பட்டத்தை வென்றார். இந்த வெற்றியை பெற அவருக்கு 38 நிமிடமே தேவைப்பட்டது. சென்னையை சேர்ந்த ஜோஸ்னா கைப்பற்றிய 11-வது சர்வதேச பட்டம் இதுவாகும்.

# இ.பி.எஸ். வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, அக். 15-

சென்னை கிரீன்வேஸ் சாலையில் அமைந்துள்ள எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வீட்டிற்கு நேற்று இமெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் உள்ள முக்கிய தலைவர்கள், பிரபலங்கள், நிறுவனங்களுக்கு தினந்தோறும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை கிரீன்வேஸ் சாலையில் அமைந்துள்ள எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வீட்டிற்கு நேற்று இமெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. போலீசார் மெயில் ஐ.டி.யை கொண்டு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என தெரிய வந்துள்ளது.

## தீபாவளி: விற்று தீர்ந்த சிறப்பு ரயில் டிக்கெட்கள்:
# முன்பதிவு இல்லாத ரயில்களை இயக்க பயணிகள் கோரிக்கை

சென்னை, அக். 15-

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அறிவிக்கப்பட்ட ரயில்களில் டிக்கெட்கள் விற்று தீர்ந்ததை அடுத்து, முன்பதிவு இல்லாத ரயில்களை இயக்க பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தீபாவளி பண்டிகை வரும் 20-ந்தேதி கொண்டாடப்படுகிறது. தொடர்ந்து விடுமுறை நாட்கள் வருவதால் சென்னையில் வசிக்கும் ராளமானோர் சொந்த ஊர்களுக்கு செல்வார்கள் என்று எதிர் பார்க் கப் ப டு கி றது. இதையொட்டி சென்னையில் இருந்து திருநெல்வேலி, நாகர்கோவில், தூத்துக்குடி, செங்கோட்டை, கோவை, பெங்களூர், திருவனந்தபுரம், கொல்லம் உட்பட நகரங்களுக்கு 15 சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டன.

ஆம்னி பஸ்களில் கட்டணம் 4 மடங்கு அதிகரித்து உள்ள நிலையில், குடும்பத்துடன் செல்லும் பெரும்பாலானோர் ரயில்களில் பயணம் செய்ய ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதனால் சிறப்பு ரயில்களில் முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களிலேயே டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்துவிட்டன.

பெரும்பாலான ரயில்களில் காத்திருப்போர் பட்டியல் 100-ஐ தாண்டியுள்ளது.

ஆம்னி பஸ்களை விட ரயில்களில் கட்டணம் குறைவு என்பதால், வழக்கமான ரயில் மற்றும் சிறப்பு ரயில்களில் டிக்கெட் கிடைக்காதோர் அடுத்ததாக பயணம் செய்யும் ஒரு நாளுக்கு முன்னதாக கூடுதல் கட்டணம் செலுத்தி தட்கல் முறையில் டிக்கெட் எடுக்க காத்திருக்கிறார்கள். எனவே தீபாவளியை முன்னிட்டு மேலும் கூடுதல் சிறப்பு ரயில்கள் மற்றும் முன்பதிவு இல்லாத பயணிகள் ரயில்களை இயக்க ரயில்வே துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஓட்டுநர் தேர்வு தானியங்கி மையங்கள் அமைக்க ஒப்பந்தங்கள் கையெழுத்து

சென்னை, அக். 15-

தமிழ்நாட்டில் ஓட்டுநர் தேர்வு தானியங்கி மையங்கள் அமைக்க ஒப்பந்தம் கையெழுத்தானது.

போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடர் 2023-24ல், போக்குவரத்துத்துறை அமைச்சரால் அறிவிக்கப்பட்ட, மாநிலத்தின் 20 பிராந்திய போக்குவரத்து அலுவலகங்களில் கணினி வசதியுடன் கூடிய தானியக்க ஓட்டுநர் தேர்வு மையங்களை அமைக்கும் திட்டத்தின் அடிப்படையில், தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்ததிட்டத்தின் ஒரு பகுதியாக, மாருதி சுசுகி இந்தியா லிமிடெட், தமது நிறுவன சமூகப்பொறுப்பு திட்டத்தின் கீழ், தற்போதுள்ள வழக்கமான ஓட்டுநர் தேர்வு மையங்களை தானியங்கியாக மாற்ற முன்வந்துள்ளது. முதற்கட்டமாக, 2025-26 நிதியாண்டில் 10 பிராந்திய போக்குவரத்து அலுவலகங்களில் தானியக்க மையங்கள் உருவக்கப்படும்.

தமிழக அரசு மற்றும் மாருதி சுசுகி இந்தியா லிமிடெட் நிறுவனத்துக்கிடையிலான ஒப்பந்த அறிக்கை நேற்று (14.10.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தீரஜ்குமார், ஐ.ஏ.எஸ்., கூடுதல் முதன்மைச் செயலாளர் (உள்துறை), ஆர். கஜலட்சுமி, ஐ.ஏ.எஸ்., போக்குவரத்து மற்றும் சாலைப்பாதுகாப்பு ஆணையர் மற்றும் போக்குவரத்துத்துறையின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மாருதி சுசுகி இந்தியா லிமிடெட் நிறுவனத்தைச் சார்ந்த தருண் அகர்வால், மூத்த துணைத்தலைவர் & சி.எஸ்.ஆர். தலைவர்; ஆர். கல்யாணசுந்தர், பொதுமேலாளர் (சாலைப்பாதுகாப்பு); துஷார் ஜோஹ்ரி, துணை பொதுமேலாளர் (சாலைப்பாதுகாப்பு); ரிஷப்அகர்வால், மூத்த மேலாளர் (சாலைப்பாதுகாப்பு); மற்றும் பி. கணேஷ், மேலாளர் (நிறுவன விற்பனை) ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். இந்த முயற்சி, ஓட்டுநர் தேர்வுகளை தொழில் நுட்பத்தின் உதவியுடன் வெளிப்படையாகவும் திறம்படவும் ஒரே தரத்தில் நடத்துவதற்கான வழியைக் காண்பதுடன், மாநிலத்தின் சாலைப் பாதுகாப்பு தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தையும் கொண்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சினிமா CINI செய்திகள்

## 'தேசிய தலைவர்' பட இசை வெளியீட்டு நிகழ்ச்சி



எஸ்.எஸ்.ஆர் சத்யா பிக்சர்ஸ் வழங்கும் இசைஞானி இளையராஜா இசையில், எஸ்.எஸ்.ஆர்.சத்யா, ஜெனிபெர் மார்கிரட் ஆகியோர் தயாரிக்கும் படம் 'தேசிய தலைவர். இப்படத்தின் இசை மற்றும் டிரைலரை சமீபத்தில் கலைப்புலி எஸ். தாணு முன்னிலையில், இசைஞானி இளையராஜா வெளியிட நடிகர் பிரபு பெற்றுக் கொண்டார்.


தேசிய தலைவர் தேவராகவே வாழ்ந்திருக்கும் நாயகன் ஜே.எம்.பஷிர், படத்தின் இயக்குநர் ஆர்.அரவிந்த்ராஜ், பழனிவேல், மூர்த்தி தேவர், ராஜ் மோகன், ரத்தினவேல் பாண்டியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துக் கொண்டார்கள். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேசிய தலைவர் - தேவர் பெருமான்' படத்தின் பிரமாண்ட நிகழ்வில் இயக்குநர்கள் ஆர்.வி.உதயகுமார், பேரரசு, மேகஜி, அரவிந்தராஜ், தயாரிப்பாளர் எஸ்.எஸ். ஆர்.சத்யா, நடிகை கௌதமி, முன்னாள் அமைச்சர் கோகுல இந்திரா, நடிகர் ஆர். கே.சுரேஷ், கவிஞர் சினேகன், நூலாசிரியர் தவமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## 'வில் (உயில்)' திரைவிமர்சனம்



தொழிலதிபர் ஒருவர் தனது சொத்துக்களை இரண்டு மகன்களுக்கு பகிர்ந்து கொடுத்து விட்டு ஒரு வீட்டை அலக்கியா பெயரில் எழுதி வைத்து விட்டு பின் இறந்து விடுகிறார். அந்த வீட்டை அபகரிக்கும் நோக்கில் வேறு ஒரு பெண்ணை அலக்கியா என்று கூறி தொழிலதிபரின் மகன் நீதிமன்றத்தில் நிறுத்துகிறார். அந்த பெண் மீது சந்தேகமடையும் நீதிபதி சோனியா அகர்வால், இந்த வழக்கின் உண்மையை விசாரிக்கும் பொறுப்பை சப் இன்ஸ்பெக்டர் விக்ராந்திடம் ஒப்படைக்கிறார்.

அதன்படி விசாரணையை மேற்கொள்ளும் சப் இன்ஸ்பெக்டர் விக்ராந்த், உண்மையான அலக்கியாவை கண்டுபிடித்தாரா? அவர் யார்? என்ற கேள்விகளுக்கான விடை தான் 'வில்'. நீதிபதியாக நடித்திருக்கும் சோனியா அகர்வால், தனது கதாபாத்திரத்திற்கு நியாயம் சேர்க்கும் வகையில் நடித்திருக்கிறார். சப் இன்ஸ்பெக்டராக வரும் விக்ராந்த், படம் முழுக்க பயணித்து தனது கதாபாத்திரத்திற்கு பலம் சேர்த்திருக்கிறார். சௌரப் அகர்வாலின் இசை ஓகே ரகம். எழுதி இயக்கியிருக்கும் எஸ்.சிவராமன், உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, சஸ்பென்ஸ் திரில்லர் ஜானரை உணர்வுப்பூர்வமான படைப்பாக கொடுக்க முயற்சித்திருக்கிறார். மொத்தத்தில், 'வில்' ஒரு சிறப்பான படம்.




**முதல்வர் மு.க.ஸ்டாலினை சென்னை தலைமை செயலகத்தில் மதுரை மாவட்ட பேராயர் அந்தோணிசாமி சந்தித்து பேசினார். உடன் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் சிறுபான்மை ஆனைய முன்னாள் தலைவர் வின்செென்ட்சின்னதுரை ஆகியோர் உள்ளனர்.**

## அருப்புக்கோட்டை புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார் அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்



**அருப்புக்கோட்டை அக்.15-**

அருப்புக்கோட்டை நகராட்சி சார்பாக புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளை அமைச்சர் கே. கே. எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆய்வு செய்தார். அருப்புக்கோட்டை மதுரை ரோட்டில் புதிய பேருந்து நிலையம் செயல்பட்டு வந்தது.

அந்த பேருந்து நிலையம் கட்டி 30 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் அதை அகற்றிவிட்டு புதிதாக பேருந்து நிலையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பேருந்து நிலையத்தில் ஏ.டி.எம். மையம், குழந்தைகளுக்கு தாய்மார்கள் பாலூட்டும் அறை, பேருந்து புக்கிங் அலுவலகம், கிளை போஸ்ட் ஆபீஸ், தங்கும் அறை உட்பட பல அனைத்து வசதிகளுடன் சுமார் 8 கோடியில் கட்டப்பட்டு வருகிறது. இந்தக் கட்டுமான பணிகளை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் ஆய்வு செய்தார். பின்னர் பணிகளை விரைவாக முடிக்க அறிவுறுத்தினார். நிகழ்ச்சியில் நகர மன்ற முன்னாள் தலைவர் சிவப்பிரகாசம், துணைத்தலைவர் பழனிச்சாமி, நகராட்சி ஆணையாளர் ராஜமாணிக்கம், தாசில்தார் செந்தில் வேல், பொறியாளர் அபூபக்கர் சித்திக், நகரச் செயலாளர்

ஏ. கே.மணி கவுன்சிலர்கள் தமிழ் காந்தன், ஜோதி ராமலிங்கம், மாவட்ட பிரதிநிதி அன்பழகன் மற்றும் நகராட்சி அலுவலர்கள் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## 'மருதம்' திரைவிமர்சனம்



ராணிப்பேட்டை அருகே உள்ள கிராமம் ஒன்றில் வசித்து வருபவர் விதார்த், மனைவி, மகனுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துக் கொண்டிருக்கிறார். விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கும் விதார்த், வாங்காத கடனுக்காக அவரது நிலத்தை வங்கி ஒன்று ஏலம் விட்டு விடுகிறது.

இதனை அறிந்து வங்கியில் முறையிடும் விதார்த்துக்கு இதில் ஏதோ மோசடி நடந்து இருக்கிறது என்பதை உணர்கிறார்.

அதன்படி, மோசடியின் பின்னணியை கண்டறிந்து, நிலத்தை மீட்டாரா? இல்லையா? என்பதை வலியின் வழியே சொல்லும் படமே மருதம். நாயகனாக நடித்திருக்கும் விதார்த், வழக்கம் போல் தான் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரத்திற்கு நியாயம் சேர்க்கும் வகையில் நடித்திருக்கிறார்.

நாயகி ரக்‌ஷனா, வசன உச்சரிப்பு, உடல் மொழி மூலம் தனது கதாபாத்திரத்திற்கு பலம் சேர்த்திருப்பவர், என். ஆர்.ரகுநந்தன் இசையில் பாடல்களில் மண்ணின் வாசம் வீசுகிறது. விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கும் விவசாயிகள் பலவிதங்களில் பாதிக்கப்படுவதும், அதனால் பலர் உயிரிழப்பதும் நாம் செய்திகளாக படித்து விட்டு கடந்து போவதுண்டு. ஆனால், அவர்களுக்கே தெரியாமல், அவர்களின் ஆதாரமான அவர்களது நிலம் அவர்களிடம் இருந்து பறிக்கப்படும் மிகப்பெரிய மோசடி பற்றி தோலுறிக்கும் முயற்சியாக எழுதி இயக்கியிருக்கிறார் இயக்குனர் வி.கஜேந்திரன். மொத்தத்தில், 'மருதம்' ஓர் அழகான எளிமையான படம்.

## தீபாவளிக்கு வெளியாகும் 'பைசன்'



அப்ளாஸ் என்டர்டெயின்மென்ட் மற்றும் நீலம் ஸ்டுடியோஸ் தயாரிப்பில், மாரி செல்வராஜ் இயக்கியுள்ள படம் பைசன். துருவ் விக்ரம் மாறுபட்ட கதாபாத்திரத்தில் நடித்துள்ள இப்படத்தில், அனுபமா பரமேஸ்வரன், ஆமீர், லால், பசுபதி, ரஜிஷா விஜயன் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படம் அர்ஜுனா விருது வென்ற தூத்துக்குடியைச் சேர்ந்த கபடி வீரர் மணத்தி கணேசன் வாழ்க்கையை மையமாக வைத்து உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது.

இப்படத்தின் படப்பிடிப்பு கடந்த ஆண்டு மே மாதம் தொடங்கி பல கட்டங்களாக நடந்து கடந்த பிப்ரவரி மாதம் நிறைவுற்றது. படத்தின் ஃபர்ஸ்ட் லுக் கடந்த மார்ச் மாதம் வெளியாகி வைரலானது. படத்தின் தமிழக வெளியீட்டு உரிமையை 5 ஸ்டார் நிறுவனம் பெற்றுள்ளது. படம் அக்டோபர் 17ஆம் தேதி தீபாவளியன்று வெளியாகவுள்ளது. இந்த நிலையில் படத்தின் பிரி ரிலீஸ் ஈவன்ட் சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. இதில் திரைப் பிரபலங்கள் பலர் கலந்து கொன்டு படக்குழுவினரை வாழ்த்தினர்.




**சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியே சொட்டு மருந்து முகாமை அமைச்சர் பெரியகருப்பன், கலெக்டர் பொற்கொடி ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் பேரூராட்சி தலைவர் கோகிலாராணி, மாவட்ட சுகாதார அலுவலர் பார்த்திபன், பேரூராட்சி துணை தலைவர் கான் முகமது உட்பட பலர் உள்ளனர்.**

## திருமங்கலம் அரசு ஹோமியோபதி மருத்துவகல்லூரி மருத்துவ மனையின் 50-ம் ஆண்டு பொன்விழா

### மாணிக்கம் தாகூர் எம்.பி பங்கேற்பு



**திருமங்கலம்,அக்.15-**

மதுரை மாவட்டம்,திருமங்கலம் அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனையின் 50 வருட கால கல்வி பணி மற்றும் பொது மருத்துவ சேவையின் பொன்விழாவில் விருதுநகர் எம்.பி மாணிக்கம் தாகூர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

திருமங்கலம் நகரிலுள்ள கல்லூரி வளாகத்தில் இரண்டு நாட்கள் வெகு விமர்சையாக நடைபெற்ற

பொன்விழாவின் துவக்க நாள் நிகழ்வாக ஹோமியோபதி மருத்துவத்தின் தந்தை மாமேதை டாக்டர் சாமுவேல் அனிமேனின் முழு உருவ சிலையை விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் ப.மாணிக்கம் தாகூர், முன்னாள் எம்.பி என்.எஸ்.வி.சித்தன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்கள். பின்னர் துவக்க விழாவின் தலைமை விருந்தினர்களோடு கல்லூரியின் முதல்வர் மற்றும் இணை இயக்குனர் மருத்துவர் ராதாமணி,தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் தலைவர் மருத்துவர் என்.ஆர்.ஜெயக்குமார் திருமங்கலம் நகர்மன்ற தலைவர் மு.ரம்யா முத்துக்குமார், துணை தலைவர் ஆதவன் அதியமான், முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் மருத்துவர் பாலாஜி, முன்னாள் மாணவர் மருத்துவர் ஈஸ்வரதாஸ், கல்லூரியின் முன்னாள் முதல்வர்கள் மருத்துவர் தேவசங்கர்,மருத்துவர் புவனேஸ்வரி, மருத்துவர் என்.கார்த்திகேயன், முன்னாள் மாணவர் சங்கத் துணை தலைவர் மருத்துவர் துரைராஜ், செயலர் மருத்துவர் ஆர்.டி.பாவலன், துணை செயலர் மருத்துவர் எபிமோசஸ், கல்லூரியின் மாணவர் பேரவை தலைவர்கள் செல்வன் ராகுல் மற்றும் செல்வி வர்ஷினி ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

இதையடுத்து கல்லூரியில் நீண்ட நாள் கோரிக்கையும் பட்டம் மேற்படிப்பு, வேலைவாய்ப்பு ஆகிய கோரிக்கைகள் முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர் மற்றும் மாணவர் பேரவை உறுப்பினர் இணைந்து முன் வைத்தனர். கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக எம்.பி மாணிக்கம் தாகூர் தெரிவித்தார். இதனை தொடர்ந்து கல்லூரியின் பொன்விழா ஆண்டிற்கான விழா மலரை வெளியிட்டப்பட்டது.

அதை தொடர்ந்து கல்லூரியின் 50 ஆண்டுகால வரலாறு காணொளியின் காட்சியாக வெளியிடப்பட்டது.

இதையடுத்து மாணவர் கலை நிகழ்ச்சிகளும் இன்னிசையுடன் கூடிய இரவு விருந்து சிறப்புடன் நடைபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சி காலம் சென்ற மருத்துவ மாணவர்களுக்கான நினைவஞ்சலிடன் துவங்கியது. பின்னர் நடைபெற்ற அறிவியல் கருத்தரங்கில் நாட்டின் முன்னணி மருத்துவர்களாக விளங்கும் முன்னாள் மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆய்வு கட்டுரைகள் இடம்பெற்றது. பின்னர் கல்ப விருக்ஷா என்ற நிகழ்வின் கல்லூரியின் முன்னாள் முதல்வர்கள், முன்னாள் ஆசிரியர்கள், முன்னாள் மற்றும் இந்நாள் மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.இந்த கல்லூரியில் படித்து பட்டம் பெற்ற அனைத்து மருத்துவர்கள் மற்றும் மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சியுடன் விழா இனிதே நிறைவுற்றது. ஆயிரக்கணக்கான முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்ட இவ்விழாவினை கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து சிறப்புடன் நடத்தினர்.

## நத்தத்தில் செண்பகவல்லி அம்மன் கழுத்தில் இருந்த தாலி திருட்டு

**நத்தம், அக்.15-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கோவில்பட்டியில் அமைந்துள்ளது கைலாசநாதர்- செண்பகவல்லி அம்மன் கோவில். இங்கு செண்பகவல்லி அம்மனுக்கு தனி சன்னதி.இந்த கோவிலில் தினமும் காலை, மாலை நடைதிறக்கப்பட்டு பூஜைகள் நடத்தப்படுவது வழக்கம். இந்நிலையில் கடந்த 9-ம் தேதி மாலை வழக்கம்போல் கோவில் திறக்கப்பட்டு பூஜைகள் நடந்தது.தொடர்ந்து அய்யர் கோவிலை பூட்டி விட்டு சென்றார். இந்நிலையில் மறுநாள் காலை கோவிலை திறந்த போது செண்பகவல்லி அம்மன் கழுத்தில் இருந்த 5 கிராம் தாலி சங்கிலி திருடு போயிருந்தது. இதை கண்டு அதிர்ச்சியடைந்த கோவில் பணியாளர்கள் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் செயல் அலுவலர் காயத்திரி நத்தம் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீஸ்-சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். மேலும் அம்மன் கழுத்தில் இருந்த தாலி திருடு போன சம்பவம் பக்தர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

### விருதுநகரில் உள்ள தீயணைப்பு நிலையத்தில்

## லஞ்சம் வாங்கிய 3 தீயணைப்பு வீரர்கள்: கணக்கில் வராத பல லட்சம் ரூபாய் பறிமுதல்

**விருதுநகர், அக்.15-**

விருதுநகர் - மதுரை சாலையில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம் உள்ளது. இங்கு முப்பதுக்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பட்டாசு கடைகள் அமைப்பதற்கு தீயணைப்பு நிலையம் சார்பில் லஞ்சம் வாங்கப்படுவதாக லஞ்ச ஒழிப்புத் துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது இதை அடுத்து இருசக்கர வாகனத்தில் வந்த அரிச்சந்திரன் மற்றும் நவநீதகிருஷ்ணன் ஆகிய இரண்டு தீயணைப்பு வீரர்களை நிறுத்தி வாகன சோதனையில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் ஈடுபட்ட போது ,

அவர்களிடம் இருந்து ரூபாய் 59 ஆயிரத்து 500 ரூபாய் கணக்கில் வராத ரொக்க பணமும் அவர்களிடம் இருந்த டைரி பறிமுதல் செய்து அதை ஆய்வு செய்ததில் அதில் தீபாவளி பண்டிகைக்காக கடைகள் அமைக்கப்படுவதில் எந்தெந்த கடையில் எவ்வளவு ரூபாய் வசூல் செய்தோம் என்ற விவரம் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அந்த விவரத்தை வைத்து லஞ்ச ஒழிப்புத் துறையினர் வினோத் என்ற மற்றொரு தீயணைப்பு வீரரின் வங்கி கணக்கில் ரூபாய் 3, 79,000 இருப்பதும் தெரியவந்தது லஞ்ச ஒழிப்புத் துறையினர் மூவரையும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்திற்கு வரவழைத்து தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வேறு எந்த பகுதியில் லஞ்சம் பெறப்பட்டது யார் யாருக்கு இதில் தொடர்புடையது என்பது குறித்து லஞ்ச ஒழிப்புத்துறையினர் தொடர் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

## 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வை மக்கள் வீட்டுக்கு அனுப்பி, எடப்பாடியாரை முதலமைச்சராக ஆக்குவார்கள்

### மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் பா.சரவணன் நம்பிக்கை



**மதுரை, அக். 15-**

2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வை மக்கள் வீட்டுக்கு அனுப்பி, எடப்பாடியாரை முதலமைச்சராக ஆக்குவார்கள் என்று மாநில மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் பா.சரவணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அ.தி.மு.க.மாநில மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் சரவணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை இடத்தில் உள்ளது என்று அடிக்கடி முதல்வர் ஸ்டாலின் தனக்குத்தானே பெருமையாக பேசி கொள்கிறார். இன்றைக்கு தமிழகத்தின் நிர்வாக சீர்கேட்டு காரணமாக கடந்த நான்கரை ஆண்டு காலம் நீதிமன்றங்கள் மூலம் இந்தியாவிலே அதிக அளவில் கடும் கண்டனங்களை பெற்ற அரசாக தி.மு.க.அரசு உள்ளது. இதனால் தமிழகத்திற்கு தொடர்ந்து தலைகுனிவு தான் ஏற்பட்டுள்ளது. இதைத் தான் எடப்பாடியார் தி.மு.க. ஆட்சியின் அவலங்களை குறித்து மக்கள் மன்றத்திலும், சட்டமன்றங்களும் எடுத்துரைத்து தோலுரித்துக் காட்டி வருகிறார்.

விழுப்புரத்தில் நடைபெற்ற கள்ளச்சாராய 60 பேர் பலி சம்பவத்தில் அ.தி.மு.க. சார்பில் இதற்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று நீதிமன்றம் சென்றபோது நீதியரசர்கள் சிபிஐக்கு உத்தரவிட்டு அரசுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்தனர். அதேபோல போதை பொருள் நடமாட்டம் குறித்து வழக்கு வந்த போது அதில் நீதியரசர்கள் தமிழகத்தில் போதை பொருள் தாராளமாக கிடைக்கிறது அது காவல்துறைக்கு தெரியுமா? பள்ளி குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் இதை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நாங்களே சிறப்பு புலனாய் குழு அமைத்து ஒப்படைக்க பரிசீலிக்கப்படும் என்று கூறினார்கள்.

இதற்கெல்லாம் மேலே அமைச்சரக இருந்த செந்தில் பாலாஜி,பொன்முடி ஆகியோர் நீதிமன்றம் மூலம் கடுமையாக கண்டனம் தெரிவித்த பின்பு இருவர் பதவியும் பறிக்கப்பட்டது. எதற்கெடுத்தாலும் முதல்வர் ஸ்டாலின் இந்தியாவிற்கே வழிகாட்டும் மாநிலம் தமிழகம் என்றும்,இந்தியாவில் முதன்மை மாநிலம் தமிழகம் என்றும் அடிக்கடி பெருமையாக பேசி தங்கள் மீது உள்ள தவறை மூடி மறைக்க நினைக்கிறார். ஆனால் உண்மைநிலை என்ன வென்றால் கடன் வாங்கும் மாநிலங்களில் தமிழகம் முதலிடம், லாக்கப் மரணங்களில் தமிழகம் முதலிடம், தி.மு.க. காங்கிரஸ் கொண்டு வந்த நீட் தேர்வு எதிர் கொள்ள முடியாமல் மாணவர் தற்கொலையில் தமிழகம் முதலிடம், போதை பொருள் நடமாட்டத்தில் தமிழகம் முதலிடம். அதனால் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் முதல்வர் ஸ்டாலினை மக்கள் வீட்டுக்கு அனுப்பி, எடப்பாடியாரை தமிழக மக்கள் முதலமைச்சராக ஆக்குவார்கள். இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



● சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில் புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை, கடலூர் மாவட்டம் பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



● சென்னை சட்டமன்ற பேரவையில் கரூரில் நடந்த கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்கள், கேரள மாநில முன்னாள் முதல்வர் வி.எஸ்.அச்சுதானந்தன், ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் சிபுசோரன், நாகாலாந்து மாநில கவர்னர் இல.கணேசன், இ.கம்யூ. முன்னாள் பொதுச்செயலாளர் சுதாகர்ரெட்டி, முதன்மைச்செயலாளர் பீலா வெங்கடேசன், சட்டமன்ற பேரவை உறுப்பினர் டி.கே.அமுல் கந்தசாமி ஆகியோரது மறைவிற்கு இரங்கல் தீர்மானங்களும், சட்டமன்ற பேரவை முன்னாள் உறுப்பினர்கள் மறைவிற்கு இரங்கல் குறிப்புகளும் நிறைவேற்றப்பட்டு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் சந்தித்து பேசினார். உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைச்செல்வன், எஸ்.எஸ்.பாலாஜி, ஜெ.முகம்மது ஷா நவாஸ், எம்.பாபு உடனிருந்தனர்.

# அனைத்து சட்டமன்ற தொகுதிகளில் மினி ஸ்டேடியம் அமைக்க திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, அக். 15-

தமிழகத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளில் மினி ஸ்டேடியம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நிறைவு விழா சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று நடைபெற்றது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நினைவுப் பரிசு வழங்கினார்.

அதன்பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

முதல்வர் கோப்பை 2025 போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றிருக்கும் அனைத்து விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு எனது வாழ்த்துகள், பாராட்டுகள். அதிமுக ஆட்சியின் 5 ஆண்டுகளில் விளையாட்டுத்துறை உட்கட்டமைப்புக்கு ரூ.170.31 கோடி ஒதுக்கினார்கள்.

கடந்த 4 ஆண்டு தி.மு.க. ஆட்சியில் உட்கட்டமைப்புக்கு மட்டும் ரூ.601.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். விளையாட்டுத்துறைக்கு மொத்தமாக ரூ.1,945.07 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். தமிழகம் போல் வேறு எந்த மாநிலத்திலும் விளையாட்டு வீரர்களுக்கு இதுபோன்ற உதவி கிடைப்பதில்லை. தமிழகத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் மினி ஸ்டேடியம் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. உங்களுக்கான அத்தனை வாய்ப்புகளையும் உருவாக்குகிறோம். விளையாட்டில் கவனம் செலுத்தி, வெற்றி பெற்று தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் பெருமை தேடித் தாருங்கள். திமுக ஆட்சி விளையாட்டுத்துறையின் பொற்காலம். விளையாட்டு துறையை நானே கவனிக்கலாம்னு ஏக்கம் வந்து இருக்கு.

தமிழ்நாட்டில் இத்தனை திறமையான இளைஞர்களை அடையாளம் காண்பதற்காக உழைத்த, உழைத்து கொண்டிருக்கக்கூடிய துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துகள், பாராட்டுகள். இளைஞர்களின் நலனையும், விளையாட்டுத் துறையையும் இளம் மற்றும் துடிப்பான அமைச்சரிடம் ஒப்படைத்தால் அது எப்படி வெற்றிகரமாக அமையும் என்பதற்கு தமிழ்நாடு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.



● சென்னை தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற அலுவலக கூட்டரங்கில் நேற்று உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தலைமையில் உயர்கல்வி தரத்தினை மேலும் உயர்த்திடவும் உயர்கல்வியை மாணாக்கர்களுக்கு கொண்டு சேர்ப்பதை உறுதி செய்திடவும் உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் 13 பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் உள் தர உறுதிப்பிரிவு ஒருங்கிணைப்பாளர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

### அ.தி.மு.க. 54-வது ஆண்டு தொடக்க விழா:

# வரும் 17-ம் தேதி தலைமை அலுவலகத்தில் எடப்பாடி பழனிசாமி கொடியேற்றுகிறார்

சென்னை, அக். 15-

அ.தி.மு.க. நிறுவனத் தலைவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கப் பட்ட 'அ.தி.மு.க' வருகிற 17-ம் தேதி அன்று 54-வது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் எடப்பாடி பழனிசாமி கொடியேற்றுகிறார்.



அ.தி.மு.க. தலைமைக்கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது:- அ.தி.மு.க. நிறுவனத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கப் பட்ட "அ.தி.மு.க." வருகிற 17-ந்தேதி (வெள்ளிக்கிழமை) அன்று 54-வது ஆண்டில் அடியெடுத்து வைப்பதைக் கொண்டாடும் வகையில் அன்று காலை 10 மணியளவில், சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலை, தலைமைக் கழக வளாகத்தில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரது உருவச் சிலைகளுக்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, கழகக் கொடியினை ஏற்றி வைத்து, இனிப்பு வழங்க உள்ளார். இந்த நிகழ்ச்சிகளில், பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அதேபோல் கழகத்தின் 54-வது ஆண்டு தொடக்க நாளை முன்னிட்டு ஆங்காங்கே கம்பீரமாக வீற்றிருக்கும் கழக கொடிக் கம்பங்களுக்கு புதுவர்ணம் பூசியும், கொடிக்கம்பங்கள் இல்லாத இடங்களில் புதிய கொடிக் கம்பங்களை அமைத்து கழகக் கொடியினை ஏற்றி வைத்தும், நம் இருபெரும் தெய்வங்களான புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரது உருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கியும், ஏழை, எளியோருக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கியும் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்வதோடு, கழக அமைப்புகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பிற மாநிலங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி, கழகத்தின் தொடக்க நாளை விழாக்கோலத்துடன் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தீபாவளி அன்று 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க அனுமதி: தமிழக அரசு

சென்னை, அக். 15-

தீபாவளி அன்று 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

தீபாவளி தினத்தன்று 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க அனுமதி அளித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: -

தீபாவளித் திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும்.

இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள்.

அதேவேளையில், பட்டாசுகளை வெடிப்பதால் நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், காற்று



உள்ளிட்டவை பெருமளவில் மாசுபடுகின்றன.

பட்டாசு வெடிப்பதால் எழும் அதிகப்படியான ஒலி மற்றும்காற்று மாசினால் சிறு குழந்தைகள், வயதான பெரியோர்கள் மற்றும் நோய்வாய் பட்டுள்ள வயோதிகர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை கோரி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கில் உச்ச நீதிமன்றம் கடந்த 2018 உத்தாரவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மூலப்பொருட்களை பயன்படுத்தி பட்டாசுகளை உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், வருங்காலத்தில் பசுமைப் பட்டாசுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் எனவும் நிபந்தனைகளை விதித்தது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு 2018-ஆம் ஆண்டிலிருந்து தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலிஎழுப்பும் பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது.

இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகை தினத்தன்று, கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் பொங்கல் பண்டிகைக்கு வேட்டி சேலை வழங்கும் திட்டம், பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் துறைச்சார்ந்த திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கைத்தத்துறை செயலாளர் வே.அமுதவல்லி, துணிநூல் துறை இயக்குநர் இரா.லலிதா, கோ-ஆப் டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கவிதா உள்ளனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் முன்னிலையில் தமிழ்நாட்டில் முதற்கட்டமாக, 2025-2026 நிதியாண்டில் 10 வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் தானியங்கி ஓட்டுநர் தேர்வு மையங்கள் அமைத்தல் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை மற்றும் மாருதி சுசுகி இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று வடக்கு சிக்கிமில் உள்ள ரோங்லி சூவில் படைப்பணியின்போது மரணமடைந்த தமிழ்நாட்டை சார்ந்த இளநிலை படை அலுவலர் கே.தங்கபாண்டியின் மனைவி வளர்மதியிடம் கார்கில் நிவாரண நிதியிலிருந்து கருணை தொகையாக ரூ.40 லட்சத்திற்கான காசோலையை மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார். இதில் செயலாளர் ரீட்டா ஹரீஷ்தக்கர், கி.பாலசுப்ரமணியம் உடனிருந்தனர்.